252

# ஹோமியோபதி.

ஆகஸ்டு 1969

JL
LLm211,N43110·
31N57.14.8
148857

972

# ஹோமியோபதி

ஆகஸ்டு 1959



# அல்டோபெக்ஸ்

ஹோமியோபதியில் புகழும் பயனும்மிக்க "அல்பால்பா"
டானிக் உடன் வைட்டமின் B. காம்ப்ளக்ஸ்
சேர்க்கப்பட்டது.

○ ● ○

ஒய்ந்து தேய்ந்த உடலுறுப்புக்கள் ஊறித் தேறி வலுப்பெற வைக்கும் தேகாரோக்கிய தேன்சுவை டானிக்.

இளமையின் இன்பத்தை இழந்து வாடும் வாலிபர்களும், வலிவிழந்த வயோதிகர்களும், வளர்ச்சி குன்றிய சிறுவர்களும், தீவிர நோயால் தேகநலம் பாதிக்கப்பட்டவர்களும், மகப்பேறுவால் நலிந்து மெலிந்த தாய்மார்களும், இரத்த சோகையால் பீடிக்கப்பட்டோர் யாவரும் ஆரோக்கியத்தோடு ஆனந்தமாக வாழ அல்டோபெக்ஸ் அருந்தலாம்.

4 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 3—50
1 பவுண்டு பாட்டில் விலை ரூ. 12—00

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
ஹோமியோ ஹவுஸ் :: கும்பகோணம்



# ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர்: டாக்டர் V. R. மூர்த்தி


ஆகஸ்டு 1959



கூட்டணி பிறந்தது ... 3
சில அபூர்வ மருந்துகளும் அவைகளின் உபயோகமும் ... 5
கன்றுக்குட்டியும் ஹோமியோபதியும் ... 8
நோய் நீக்கும் முறையின் பெரும் நியதி ... 11
கருச் சிதைவின் அறிகுறிகள் ... 16
சென்னை மாநில பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கங்களின் கூட்டணி ... 20
சங்க நடவடிக்கைகள் ... 23
மூரியாட்டிக் ஆஸிட் ... 26



GP




INDIAN INSTITUTE OF HOMOEOPATHS
HOMEO HOUSE ... KUMBAKONAM

# இருபது ஆண்டுகள்

1—9—59—அன்று

எங்கள் ஸ்தாபனத்திற்குப் பிறந்த நாள்.

சரியாக இருபது வருடங்களுக்கு முன் 1—9—1939-அன்று சிறியதோர் நிலையமாகத் தோன்றிய எங்கள் ஸ்தாபனம் அன்பர்களின் ஆதரவாலும், எம்பெருமானின் எல்லையற்ற கருணையினாலும் நம் நாட்டிற்கும் "ஹோமியோபதி"க்கும் விடாமுயற்சியுடனும். சிறப்புடனும் சேவைபுரிந்து. செழித்தோங்கி. இன்று இந்தியாவிலேயே இத்துறையில் பிரதம ஸ்தாபனமாக விளங்குகிறது.

இந்நன்னாளில் என்றும்போல் இனியும் எல்லோருக்கும் செவ்வனே சேவை செய்ய. "உழைப்பும் நேர்மையும் உயர்வதற்கு வழிகள்" என்ற எங்கள் இலட்சியத்தைக் கடைப்பிடிப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்**

கும்பகோணம் :::: சென்னை


# ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர்: டாக்டர் V R மூர்த்தி

மலர் 14 — ஆகஸ்டு 1959 — இதழ் 8


## கூட்டணி பிறந்தது!

சென்னை மாநில பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கங்களினது கூட்டணியின் முதல் பொதுக் குழு சென்ற மாதம் திருச்சியில் கூடிச் செயல்படத் துவங்கியுள்ளது என்ற சுபச் செய்தியை நேயர்கள் அறிவர். நேரத்தின் அவசிய, அவசர நிலையை உணர்ந்து நிறுவப் பெற்றுள்ள இந்தக் கூட்டணியை ஒவ்வொரு உண்மையான ஹோமியோபதியரின் உள்ளமும் வரவேற்று வாழ்த்துரை வழங்கும் என்பதில் நமக்கு ஐயமில்லை. காலத்தில் செய்த நம் முயற்சியை ஞாலத்தில் பயன்மிக்கதாய் மிளிரச் செய்யவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வழிபடுகிறோம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்தர்ப்பத்தில் நமது புதிய சம்மேளனம் பிறந்துள்ளது. சுகப்பிரஸவம்தான். எனினும் பருவகால சூழ்நிலைகள் சரியாக இல்லை. எனவே, குழந்தையை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டியது நமது கடமையாகிறது. குழந்தையின் குளிர்முகமும், கொஞ்சும் மொழியும் மலடியான மாற்றுந்தாயினுடைய கோபத்தைக் கிளறி விடலாம். ஆகவே எது விஷயத்திலும் நாம் அஜாக்கிரதையாக இருப்பது ஆபத்தாகவே முடியும்.

தமிழகத்தின் தலைசிறந்த ஹோமியோபதி அறிஞரும், ஹோமியோபதியின் வளர்ச்சிக்கு தம் வாழ்நாள் முழுவதையுமே அர்ப்பணித்த தூய தொண்டருமாகிய குடந்தை டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் கூட்டணியின் முதல் தலைவராக ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். தமிழக ஹோமியோபதியர்கள், தன்னலமற்ற ஒரு தியாக மூர்த்தியைத் தங்கள் தலைவாகப் பெற்றிருப்பது அவர்களது பாக்கியமே ஆகும். டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டு, கூட்டணி, சீரும் சிறப்பும் பெற்றுச் செழித்தோங்குமாக!

148857



தமிழ் நாட்டின் ஹோமியோபதி பிரபலஸ்தர்கள் அனைவரும் கூட்டணியின் செயற் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. மாவட்ட பிரதிநிதித்துவத்தின் அடிப் படையிலும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருப்பது பாராட்டுதற்குரியதாகும். எல்லா வகையிலும் நமது புதிய கூட்டணி, ஹோமியோபதியர்களின் சகல அம்சங்களையும் அபிலாஷைகளையும், பிரதிபலிப்பதாகவும், சக்திவாய்ந்ததாகவும் அமைந்திருப்பது கண்டு நாம் அகமகிழ்கிறோம்.

தமிழக ஹோமியோபதியர்களின் தனிப் பெரும் ஸ்தாபனமாக நமது கூட்டணி விளங்க வேண்டும். இதுவரை கூட்டணியில் இணையாத சங்கங்கள் உடனடியாக அவ்வாறு செய்வது உசித மானது. சாத்தியமான சகல வழியிலும் சம்மேளனத்தை நாம் வலுப்படுத்த வேண்டும். ஆங்காங்கே மாவட்ட அடிப்படையிலும், வட்ட அடிப்படையிலும் மாநாடுகள் நடத்தி கூட்டணியின் கோட்பாடு களை அனைவருக்கும் விளக்கி, கூட்டணியின் எதிர்கால வேலைத் திட்டத்தை விவரித்து ஹோமியோபதியர்களை உஷார்படுத்திக் கொண்டே வரவேண்டும். இது விஷயத்தில் தலைவர் அவர்களும் பொதுச் செயலாளர் திரு. எம். கோபாலகிருஷ்ணன் அவர்களும், ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் ஊக்கம் கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உள்ளத்தில் உறுதியும், தூய்மையும் கொண்டு, தன்னலமின்றி, நேர்மையான ஒரு பொதுநல இலட்சியத்திற்காக எடுத்துக்கொண்ட எந்தக் கூட்டு முயற்சியும் தோல்வி கண்டதாக வரலாறு இல்லை. ஆகவே, நமது சொந்த விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஹோமியோபதியின் பொது நலனுக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு கூட்டணியின் கீழ் சேவை செய்வோமாக!

வாழ்க நமது கூட்டணி! வளர்க நமது ஒற்றுமை!

இன்னல் தரும் இருமல் உபாதைகளுக்கு எங்கள்

**ஹோமியோ இருமல் ஸிரப்**

ஏற்றதொரு இனிய டானிக்

இருமல் நோயின் எல்லா நிலைகளிலும் விரைவில் குணம் காணலாம்.

**பாட்டில் ஒன்றின் விலை ரூ. 2-25 ந. பை.**



# சில அபூர்வ மருந்துகளும் அவைகளின் உபயோகமும்

எஸ். என்.

## ஆண்டிமோனியம் ஆர்ஸனிகம் (AntimoniumArsenicum):

மிகுதியான மூச்சுத் திணறல், திக்குமுக்காட வைக்கும் கொடிய இருமல், களகளக்கும் மார்புச் சளி முதலிய நோய் நிலைகளில் இம் மருந்து மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இன்புளுயன்ஸா காய்ச் சலுடன் தொடர்புடைய ஜல தோஷ நிமோனியா ஜுரத்திலும், இதயத் தசை அழர்ச்சி, இதய பல வீனம் ஆகிய இருதய கோளாறு களிலும், இடது பக்கத்தில் விசேஷ மாக ஏற்படும் ப்ளூரஸி எனப்படும் நுரையீரல் சவ்வு சம்பந்தப்பட்ட வியாதியிலும் இது சிறப்பாக உப யோகப்படுகிறது.

## ஆர்ஸனிகம் அயோடேட்டம் (Arsenicum Iodatum):

க்ஷயரோகத்துடன் சம்பந்தப் பட்ட உபாதிகளுக்கு இந்த ஔஷ தம் நிவாரணமளிக்கக் காண் கிறோம். டி. பி.-யின் ஆரம்பக் கட்டத்தில், மாலை வேளையில் காய்ச்சல் ஏற்படும்பொழுதுகூட, ஆர்ஸனிக் அயோடைட் கொடுக் கப்படுவதால் நல்ல பலன் ஏற்பட லாம். ஒரே அடியாக ஆளை வீழ்த்திவிடுதல், விரைவாகவும், தாறுமாறாகவும் துடிக்கும் நாடி, அடிக்கடி விட்டுவிட்டுத் தோன்றும் காய்ச்சலும் வியர்வையும், சரீரம் இளைத்தல், வயிற்றுப்போக்கு முத லியன இந்த மருந்தின் முக்கிய குறிகளாக அமைகின்றன. நெஞ் சில் சீழ் தங்கிய புண்கள் ஏற்பட்டு, புற்று நோயாக மாறும்பொழுது, இந்த ஔஷதத்தால் நல்ல பலன் ஏற்படும்.

## பாரிடா ஐயோடேடா (Baryta Iodata):

உடலெங்கும் பரவிக் கிடக்கும், சிறிய நிணநீர்க் குழாய்களிடையே இந்த மருந்து நன்கு வேலை செய்யும். லுகோஸைடாஸிஸ் (Leucocytosis) என்று சொல்லப் படும் இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் அதிகமாக உள்ள ஒரு விசேஷமான வியாதிக்கு இது வெகுவாகப் பயன்படுகிறது கோளங்கள் பருத்துக் கடினமாகி விடுதல், குறிப்பாகத் தொண்டை யிலும் நெஞ்சிலும் உள்ள கோளங் கள் அவ்வாறு ஆகுதல், கண்ட மாலை, கண்களில் வேக்காடு, கழுத்துப் பகுதியில் உள்ள கோளங்களில் கட்டியும் வீக்கமும் ஏற்படுதல், உடல் வளர்ச்சி தடை பட்டுக் குன்றிப் போதல் முதலிய நோய் நிலைகளிலும் இம்மருந்து நிவாரணமளிக்கப் பயன்படுகிறது.

## கல்கேரியா ஐயோடேடா (Calcarea Iodata):

கோளங்கள் பருத்தல், தொண் டையில் சதை வளருதல் முதலி யவைகளை முக்கியக் குறிகளாகக் கொண்ட, கண்டமாலை சம்பந்தப் பட்ட கோளாறுகளில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஔஷதமாக இது இருக்கிறது. பருவமடையும் காலங்களில் தைரா

யிடு (Thyroid) என்னும் குருத்தெலும்புகள் பருத்தலுக்கும், ஊதச்சதையுள்ள குழந்தைகளின் தடிமன் பிடிப்பிற்கும் உபயோகப்படும். தொண்டையிலுள்ள அடினாய்டு (Adenoids) என்ற தசை பருத்துவிடுதல், கருப்பையில் ஏற்படும் பைப்ராய்டு (Fibroids) என்ற கட்டி, தொண்டையில் உண்டாகும் திடீர் வேக்காடு முதலிய வியாதிகளிலும் உபயோகம்.

## கல்கேரியா ஆர்ஸனிகா (Calcarea Arsenica):

குழந்தைகளின் கல்லீரல், மண்ணீரல் முதலிய உறுப்புக்கள் பருத்துவிடுதலுக்கு இது முக்கியமான ஔஷதம். அல்பூமின்யூரியா (Albuminuria) என்று சொல்லப்படும் மூத்திரத்தில் வெள்ளைப் பொருள்கள் காணப்படுதல், வயிற்று வீக்கம், நோய் தாக்குவதற்கு முன்பு தலையில் அதிகப்படியான இரத்த ஓட்டத்துடன் கூடிய காக்கை வலிப்பு ஆகியவைகளிலும் இது உபயோகமாகும். கருப்பையில் புற்று, கருப் பையிலும் யோனித் துவாரத்திலும் எரிவுடன் கூடிய வலி ஆகிய பெண்கள் வியாதியிலும் இதைக் கொடுக்கலாம்.

## கல்கேரியா சிலிகேட்டா (Calcarea Silicata):

மெதுவாகப் பீடித்து சிறுகச் சிறுக வளர்ந்து, நீண்ட காலத்திற்குப் பிறகு முற்றிலும் படர்ந்து வேரூன்றிய வியாதிக் குறிகளுக்கு இது நல்லதொரு நிவாரணியாகும். மிக எளிதில் தடிமன் பிடிக்கும்; வியாதியஸ்தன் மெலிந்தும் இளைத்தும் இருப்பான். உஷ்ணமடையும்போது நோய்க் குறிகள் மோசமாகும்.

டாக்டர் மூர்த்தியின்

**ஓம்கார்**

ஓமம், கற்பூரம் முதலிய பல அரிய மருந்துகள் ஹோமியோபதி முறைப்படி வீரியப்படுத்தப்பெற்று 'ஓம்கார்' என்ற உயரிய ஔஷதமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

வாய்வு, வயிற்றுப்பொருமல், புளித்த ஏப்பம், வயிற்று வலி, வயிற்றுப் போக்கு முதலிய அசீரணக் கோளாறுகளை ஓம்கார் விரைந்து கண்டிக்கும்.

1 அவுன்ஸ் பாட்டில் ஒன்றின் விலை ரூ. 1—50

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
கும்பகோணம்



## பெர்ரம் ஆர்ஸனிகம் (Ferrum Arsenicum):

சாதாரணமானதும் மிக அபாயகரமானதுமான இரத்த சோகை, பெண்கள் பருவமடையுங்கால் சம்பவிக்கும் க்ளாரோஸிஸ் (Chlorosis) என்ற இரத்த சோகை, காய்சலோடு கூடிய கல்லீரல், மண்ணீரல் பெருக்கம், அஜீரணத்தால் ஏற்படும் மலப்போக்கு, அல்பியூமினேரியா என்று சொல்லப்படும் மூத்திரத்தில் வெள்ளைக் கரு காணப்படுதல் முதலிய நோய் நிலைமைகளில் இந்த ஔஷதம் நன்கு வேலை செய்யும். இம்மருந்தையும் கல்கேரியா ஆர்ஸனிகத்தையும் மாற்றி மாற்றிக் கொடுப்பதால், குழந்தைகளுக்கு ஏற்படும் கல்லீரல், மண்ணீரல் பெருக்கத்தில் நல்ல விளைவுகள் ஏற்படக்கூடும்.

## லிதியம் கார்போனிகம் (Lithium Carbonicum):

இருதயக் கோளாறுகளோடு கூடிய நீடித்த பாரிச வாயுவில் இம்மருந்து விசேஷமாக வேலை செய்கிறது. பட்சவாதத்தால் எலும்பு மூட்டுகளில் ஏற்படும் சிறு முண்டுகள் போன்ற வீக்கம், இருதய பகுதிகளில் ஏற்படும் பட்சவாத புண்கள் இருதயத்தில் திடீர் அதிர்ச்சி ஏற்படுதல் ஆகிய வியாதிகளுக்கு உபயோகம்.

## ஸல்பர் ஐயோடட்டம் (Sulphur Iodatum):

தீவிரமான தோல் வியாதிகளில் இம்மருந்து மிகவும் விசேஷமாக உபயோகப்படுகிறது. பரியாரிப் படை, முகப்பரு, நீர் ஒழுகும் கரப்பான் படை முதலிய நோய்கள் முக்கியமானதாகும்.

## யூரேனியம் நைட்ரிகம் (Uranium Nitricum):

அதிக அளவில் சிறுநீர் வெளியேறுதல், நீரழிவு, மிகுதியான தாக வெறி, கல்லீரலின் இயற்கைத் தன்மை மாறுபடுதல், உயர்ந்த இரத்த அமுக்கம், உடலில் ஏற்படும் நீர்ச்சுரப்பு ஆகிய வியாதிகளை இந்த மருந்து நிவர்த்தி செய்யும். அதிகமாக இளைத்திருத்தல், பலவீனம், வயிற்றுச்சுரப்பு, உடலெங்கும் நீர்ச்சுரப்பு முதலிய அறிகுறிகள் இந்த ஔஷதத்தைக் குறிக்கும் குமட்டல், வாயாலெடுப்பு, கொடிய பசி, ஆகாரத்திற்குப் பிறகு வயிற்று உப்பிசம், சிறு குடல் அல்லது வயிற்றில் ஏற்படும் புண்கள் ஆகியவை அதனுடைய வயிற்றைப் பற்றிய குறிகளாகும்.

[குறிப்பு:— வில்லியம் போயரிக் எம். டி. என்பார் எழுதியுள்ள புகழ் வாய்ந்த ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவிலிருந்து, மேலே குறிப்பிடப்பட்டுள்ள மிகச் சிறந்த, ஆனால் அறிமுகம் குறைந்த, நிவாரணிகள், குறிப்பிட்ட வியாதிகளில் தீவிரமாக வேலை செய்கின்றன என்பதும் அவைகளில் குறைந்த வீரியங்களே பெரிதும் பயன்படுகின்றன என்பதும் தெளிவாகும்.

மேற்கண்ட மருந்துகள் யாவும் குறைந்த வீரியத்தில் தற்சமயம் சிறிதளவு இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டின் விற்பனை இலாகாவில் கைவசமிருக்கின்றன. விற்பனைக்குக் கிடைக்கும்.

—ஆசிரியர்]

பசியின்மை, ருசியின்மை, அஜீரணக் கோளாறுகளுக்கு
எங்கள் "கபோஸின்" நன் மருந்து

# "கன்றுக்குட்டியும் ஹோமியோபதியும்"

(Miss K. S. செல்லா, பண்ருட்டி)

நேர்முக வகுப்பு முடிந்து கும்பகோணத்திலிருந்து நான் பண்ருட்டி வந்தபோது எங்கள் வீட்டு சீமைப்பசு கன்று போட்டிருந்தது. கன்றுக்குட்டி மிக அழகாக இருந்தது. அதைப் பார்க்கும்பொழுதெல்லாம் துள்ளி விளையாடும் மான்குட்டியின் நினைவு வரும். அதன் அழகுத் தோற்றத்தை விகாரமாக்குவதுபோல் ஒரு நாள் அதன் வயிற்றில் ஒரு ரூபாய் வட்டத்திற்கு மயிர் உதிர்ந்து தோல் சிவந்து காணப்பட்டது. அது நாளுக்கு நாள் படர்ந்து வயிற்றிலும் பின்னங்கால்களிலும் பரவிக் கொண்டே வந்தது. ஹோமியோபதி மருந்து ஏதாவது இதற்கு கொடுத்துப் பார்க்கலாமா என்று நான் யோசித்தேன். மனிதர்களுக்கு ஹோமியோபதி மருந்து கொடுப்பது தெரியும், ஆனால் மிருகங்களுக்கு கொடுக்கலாமா கூடாதா என்பது தெரியாது. ஆதலால் யோசித்தேன். இறுதியாக, "கொடுத்துத்தான் பார்ப்போமே! விஷமா அது! பால் சக்கரையில் செய்ததுதானே! என்னதான் மாறுதல் ஏற்படுகிறது என்று தெரிந்து கொள்ளலாமே" என்ற முடிவுக்கு வந்தேன்.

நம் ஹோமியோபதியில் மருந்து கொடுப்பதற்கு முன்னால் முதலில் கேள்விகள் பல கேட்டு நோயின் தன்மையை நன்கு புரிந்துகொள்வது மிகவும் அவசியம். ஆகவே மெட்டீரியா மெடிக்கா புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டுபோய் கன்றுக்குட்டியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கேள்விகள் கேட்டால் அது பதில் சொல்லுமா? இது முடியாதாகையால் நான் இந்த வாலாட்டும் நோயாளியை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினேன்.

பசுவின் சாணத்தைத் தடவினால் புண் ஆறிவிடும் என்று பால் கறப்பவன் கூறினான். சாணத்தைத் தடவினார்கள். தேங்காய் எண்ணெய் இன்னும் சில எண்ணெய்களும் தடவப்பட்டன. இவைகளினால் எல்லாம் அதிகமாகிக்கொண்டு வந்ததே தவிர பலன் ஏதும் ஏற்படவில்லை. என் சகோதரியின் கணவர் மலபாரிலிருந்து கொண்டுவந்திருந்த "மயிலிளம்பட்டை" என்று ஒரு மரப்பட்டையை தந்து அதைத் தண்ணீரில் கொதிக்க வைத்து, அந்தத் தண்ணீரை புண்ணில் விடும்படி கூறினார். இதுவும் பலன் அளிக்கவில்லை.

கன்றுக்குட்டியை நான் கவனித்ததில் நான் தெரிந்து கொண்டது இதுதான். தோல் சிவந்து காணப்பட்ட பாகங்களைக் கன்றுக்குட்டி தன் சிறிய நாக்கினால் இலேசாக அடிக்கடி நக்கிக் கொடுத்துக் கொண்டது. தற்காலிகமாக சற்று உபாதைக் குறைவு ஏற்படுவதினால் மட்டுமே அது அவ்விதம் செய்திருக்க வேண்டும். அம்மாதிரி அது அடிக்கடி நக்கிக்கொண்டதால் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் பாகத்தில் அரிப்பு ஏற்படுகிறது என்று புரிந்து கொண்டேன். கன்றுக்குட்டி விளையாடும்போதும் படுத்துக் கொள்ளும்போதும் நோயுற்ற பாகத்தில் கைகால்கள் படாமலும் கீழே உராய்ந்து விடாமலும் தன்னைத்தானே சமாளித்துக் கொண்டது. இதனால் நோயுற்ற பாகத்தில் எரிச்சல் அல்லது வலி இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. நின்றுகொண்டிருக்கும் போதெல்லாம் அடிக்கடி கால்களை மடித்து மடித்து படுத்துக் கொள்வதற்கு எத்தனிக்கும். இதைப் பார்க்கும்போது அதற்கு நிற்பது சிரமமாக




## டிஷ்யூடோனா

சரீரத்தின் வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு வைடமின்களைப் போல் தாது உப்புக்களும் அவசியமாகின்றது இத்தாது உப்புக்களில் ஏதேனும் குறைவேற்பட்டால் பற்பல வியாதிகள் தோன்றுகின்றன.

டிஷ்யூடோனாவில் டாக்டர் ஷூஸ்லர் என்பவர் கண்டறிந்த பன்னிரு வகைத் தாது உப்புக்களும் உடலில் உட்கொண்ட உடனேயே கிரகித்துக் கொள்ளத் தக்க வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ஒன்று விலை ரூ. 2-50**

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்
ஹோமியோ ஹவுஸ்
கும்பகோணம்

சென்னையில்:
நெ. 6, ஸ்டிரிங்கர் தெரு,
**சென்னை—1**


இருக்கிறதோ என்று தோன்றும். குளிப்பாட்டினால் வெய்யலில்போய் படுத்துக்கொள்ளும். இதனால் குளிப்பது அதற்கு பிடிக்கவில்லை என்று தெரிந்தது இக்குணங்கள் எல்லாம் சேர்ந்து "ஸல்பர்" என்னும் நம் ஹோமியோபதி மருந்தை என் நினைவுக்குக் கொண்டு வந்தது.

இச்சமயத்தில் பழைய ஹோமியோபதி சஞ்சிகை ஒன்றில் (ஜூன் 1953) வியாதி வராமல் தடுப்பதற்கு சிசு பிறந்தவுடனே 'ஸல்பர்' உயர்ந்த வீரியத்தில் ஒரு தடவை கொடுக்கலாம் என்பதை எதேச்சையாகப் படிக்க நேர்ந்தது. ஆதலால் சிசுக்களுக்கு 'ஸல்பர்' பயமில்லாமல் கொடுக்கலாம் என்று தீர்மானித்து, இந்த 4 கால் நோயாளிக்கு நாள் ஒன்றுக்கு ஒருதடவை ஸல்பர் I M கொடுத்து வந்தேன். முதல் நாள் அடிக்கடி சொறிந்து கொள்வதை நிறுத்தி விட்டது. இரண்டாம் நாள் ஒரே சிவப்பாக இருந்த புண் சற்று வாட்டமடைந்து காணப்பட்டது. இன்னும் நான்கு தினங்களில் நோயுற்ற இடங்களில் எல்லாம் மயிர் வளரத் தொடங்கியது. 15 தினங்களில் கன்றுக்குட்டி பழைய நிலைக்கு வந்துவிட்டது.

ஜவ்வரிசி போன்ற ஹோமியோபதி மாத்திரைகளில் மருந்தே இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு உயர்ந்த வீரியத்தில்—இவ்வளவு அணுசக்தி அடங்கி இருப்பதை அனுபவத்தில் காணும்போது யாருமே வியக்காமல் இருக்க முடியாது.

நேர்முக வகுப்பில் ஒரு நாள் நம் ஆசிரியர் Dr. V. R. மூர்த்தி அவர்கள் தன் காரில் எடுத்துச் செல்லும் சிறிய பாட்டரி ரேடியோ ஒன்றை வகுப்பில் கொண்டு வந்து வைத்தார். அந்த ரேடியோவை

அன்று வகுப்பில் வைத்ததற்கு அவர் இப்படி விளக்கம் தந்தார். "இந்த ரேடியோவை இன்று இங்கே ஏன் கொண்டு வந்தேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஹோமியோபதியில் ஒரு பங்கு மருந்து எடுத்து 99 பங்கு பால் சர்க்கரை சேர்த்துக் கலக்கி அதிலிருந்து ஒரு பங்கு எடுத்து மீண்டும் 99 பங்கு பால் சர்க்கரையுடன் சேர்த்துக் கலக்கி, இப்படியே இருநூறாவது வீரியத்துக்கு வரும் போது அதில் மருந்தே இல்லை என்று சொல்லக்கூடிய நிலையில் அது எப்படி வேலை செய்கிறது என்று என்னிடம் சிலர் கேட்டதுண்டு. அவர்களைப் போன்றவர்களுக்கு இந்தப் பாட்டரி ரேடியோதன் பதிலை சொல்லாமல் சொல்கிறது. எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் பேசப்படுவதை காற்றிலிருந்து பிடித்து நம் காதுகளுக்கு அந்த சப்தத்தை கேட்கச் செய்யும் சக்தி இந்தச் சிறு பாட்டரி ரேடியோவுக்கு எப்படி இருக்கிறதோ, அதுபோல் உயர்ந்த வீரியத்தில் உள்ள ஒரு ஹோமியோபதி மருந்திலும் வியக்கத்தக்க சக்தி அடங்கி இருக்கிறது. அந்த அணுசக்திதான் நம் உடலில் வேலை செய்கிறது" என்றார்.

ஆம், அவர் சொல்லுவதில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது! அது முற்றிலும் உண்மை. சிறு உதாரணத்தின் மூலம் எவ்வளவு பெரிய உண்மையை நம் மனதில் படிய வைத்து விட்டார்!

இது வரையில் மனிதர்களுக்கு மட்டும்தான் ஹோமியோபதி மருந்து கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது மிருகங்களுக்கும் கொடுக்கலாம் என்பதை அனுபவத்தில் தெரிந்து கொண்டேன்.

வேடிக்கையாகக் கன்று குட்டியிடம், "சரி, இனி ஹோமியோபதியை யாராவது எதிர்த்துப்பேசினால் உனக்கு கொம்பு முளைத்ததும் அவர்களை முட்டித்தள்ளவேண்டும், என்ன" என்றேன். அதுவும் 'சரி' என்று சொல்வதுபோல் "உம்" என்று தன் கனைப்பின்மூலம் எனக்கு பதில் தந்தது, நேர்முக வகுப்பில் பதில் சொன்ன பாட்டரி ரேடியோவைப்போல்!

---

ஹோமியோபதி தொழில்துறையில் அவ்வப்பொழுது ஏற்படும் அபிவிருத்திகளை அறிந்துகொள்ள நமது

ஹோமியோபதியில்

உடனே சந்தாதாரராகச் சேருங்கள்.

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | உள்நாடு | ரூ. 3—0—0 |
| ,, | வெளிநாடு | ரூ. 4—0—0. |




# * நோய் நீக்கும் முறையின் பெரும் நியதி

(தமிழாக்கம்:- இ. ஷாஹுல் ஹமீது)

டாக்டர் எப். கார்ட்டியர் (Dr. F. Cartier) என்பார் "சுவாச உறுப்புகளுக்குரிய சிகிச்சை" என்ற தனது புத்தகத்தில் பின் வரும் விஷயங்களை விளக்கியுள்ளார்.

"வெங்காயத்தை உரிக்கும் பொழுது விழிகளிலிருந்தும், மூக்கிலிருந்தும் நீர் வழிவதைக் காண்கிறோம். 'ஒத்தவை, ஒத்தவைகளால் குணப்படுத்தப்படும்' என்ற விதிமுறையின் அடிப்படையில், மூக்கில் மிகுதியாக நீர் சுரத்தலை ஆராயப் புகுவது மிகவும் சுவை நிரம்பிய விஷயமாகும். அப்படி ஆராயும்பொழுது அல்லியம் சீபா (வெங்காயம்) மூக்கின் ஒழுக்கை நிவர்த்திக்க உபயோகப்படுவது உணரப்பட்டது. இதன் மூலம் நமது அனுபவம் 'ஒத்தவை விதி" யின் (Law of Similar) உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துகின்றது. மூக்கில் மிகுதியாக நீர் சுரந்து, வழிந்து ஓடுகிற உபத்திரவத்தை நிவர்த்திக்க இந்த மருந்து மிகச்சிறந்ததாக இருக்கிறது. அல்லியம் சீபாவின் குண நல விளைவுகளைப் பற்றி நமது மெட்டீரியா மெடிகா பின்வரும் விபரங்களைக் கொடுக்கிறது. "முதலாவதாக, தண்ணீர் போன்ற திரவ ஒழுக்கு; சில சந்தர்ப்பங்களில் நோயாளி கீழே படுத்துக்கிடக்கும் பொழுது, மூக்கில் உள்ள திரவம் தொண்டையினுள் மெதுவாக ஒழுகும். இரண்டாவதாக, இத்தகைய ஒழுக்கு, மூக்கின் முனைகளிலும், உட்புற இதழ்களிலும், மேல் உதட்டிலும் ஒருவித எரிவை ஏற்படுத்தும். மூன்றாவதாக விழிகளிலிருந்து நீர்சுரந்து வழியும். ஆனால் அப்படி வழியும் கண்ணீர் தோலைப் புண்ணாக்காது. நாலாவதாக, மூக்கின் ஒழுக்கு, திறந்த வெளியில் இருக்கும் பொழுது நின்றுவிடும். உஷ்ணமான அறையில் இருந்தால் மீண்டும் மிகுதியாக ஒழுக ஆரம்பிக்கும்".

தேனீக்கள் கொட்டுவதாலும், நெட்டில் என்ற முட்செடிகள் உராய்வதாலும் ஸ்பானிஷ் பூச்சி (Spanish Fly) என்ற ஒருவகை சிலந்தி கடிப்பதாலும் ஏற்படக் கூடிய புண்களைப் போன்று தீயினால் சுடப்படும் புண்களும் ஏற்படுகின்றன. மேற்கண்ட மூன்றிலிருந்தும் தயாரிக்கப்படும் மருந்துகளில் ஒன்றை உள்ளுக்கு கொடுத்து, வெளியிலும் தடவினால் மிகவும் கடுமையான நெருப்புப் புண்களால் ஏற்படும் வலிகள் உடனே நிற்கும்; கொப்புளங்கள் எதுவும் ஏற்படாது மிகப் பயங்கரமான புண்கள்கூட சில நாட்களில் ஆறிவிடும். திரு. ருகர்ட் (Ruckert) என்பார் இவ்வாறு எழுதியுள்ளார்.

"நெருப்பு சுடுவதால் தோலில் ஏற்படும் புண்கள்:- காந்தாரைட்ஸ் என்று சொல்லப்படுகிற ஸ்பானிஷ் பூச்சி கடிப்பதால், நெருப்பு சுடுவதினால் ஏற்படும் கொடிய வேதனையைபோன்ற வலியும், தீப் புண்களைப் போன்ற பெரிய கொப்புளங்களும் ஏற்படுகின்றன என்பது யாவரும் அறிந்ததே நெருப்பு சுடுவதால் தோன்றும் புண்களுக்கும் அதிக குளிர் தாக்குவதால் உடலில் ஏற்படும் வெடிப்புகளுக்கும் காந்தாரைட்ஸ் தக்கதொரு

* Translation of "The great law of cure" from the book "Miracles of healing and how they are done" by Mr. J. Ellis Barker with the kind permission of Mrs. J. Barker.

நிவாரணியாக இருக்கிறது என்பதானது டாக்டர் ஹானிமன் அவர்களுக்குப் பெரியதொரு வெற்றியாகவும், ஒத்தவை ஒத்தவையால் குணப்படுத்தப்படும் என்ற தத்துவத்தின் உண்மையை நிரூபிக்கும் அத்தாட்சியாகவும் அமைந்திருக்கிறது. பல ஆண்டுகளாகவே நெருப்புப் புண்களுக்கு அதிக அளவில் நிவாரணம் அளித்து வந்திருக்கிறேன். தீப்புண்களுக்குச் சரியான மருந்து காந்தாரைட்ஸ் (Cantharides) திராவகத்தை இரண்டாவது அல்லது மூன்றாவது வீரியத்தில் கொடுப்பது தான் என்பதை அனுபவவாயிலாக அறிந்துகொண்டேன். சிறிய புண்களாக இருந்தாலும்சரி, பெரிய புண்களாக இருந்தாலும் சரி, அம்மருந்தையே உபயோகிக்கலாம். அந்த ஔஷதத்தைப் பயன்படுத்திய அக்கணமே வலிகள் மறைந்து விடுகின்றன. கொப்புளங்கள் தோன்றுவதும் தடுக்கப்படுகின்றது. தீப்பற்றி எரிவுண்ட தோலும், விரைவாகவும் மென்மையாகவும், எத்தகைய வடுக்கள் ஏற்படாமலும் ஆறிவிடுகின்றது. தீப்புண் ஏற்பட்டவுடன் வேறு மருந்துகள் இன்றி இதையே முதல் மருந்தாக உபயோகிக்கும் பொழுதுதான் இத்தகைய திருப்திகரமான விளைவுகள்ஏற்படுகின்றன. தீப்புண் ஏற்பட்டவுடன், குளிர்ந்த தண்ணீராலோ அல்லது ஈயத்தின் தண்ணீராலோ (Lead water) உருளைக் கிழங்கைக் கொண்டோ சிகிச்சை செய்துவிட்டு, அதன் பிறகு காந்தாரைட்ஸ் திராவகத்தைக்கொண்டு சிகிச்சை செய்வதால் அவ்வளவு திருப்திகரமான நல்ல பலன்கள் ஏற்படுவதில்லை. ஆகையால், ஒவ்வொரு வீட்டிலும் காந்தாரைட்ஸ் திரவம் கைவசம் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். யாருக்கேனும் தீப்புண் ஏற்பட்டால், வீர்யப் படுத்தப்பட்ட திரவத்தில் ஒரு சிறு துணியை நனைத்து புண்ணில் தடவ வேண்டும். பத்து நிமிஷங்களுக்கு ஒருமுறை மருந்து தடவுவதைத் தொடர்ந்து செய்யவேண்டும்.''

“துப்பாக்கி மருந்து வெடித்ததால் 13 வயதுள்ள ஒருவனுக்கு கொடிய தீப்புண்கள் ஏற்பட்டன. அவனுடைய உடைகள் சாம்பலாகி விட்டன. அவனது முகமெலாம் கடுமையான தீக்கிரையாகிக் கருகி விட்டது. அவனுடைய கண் இமைகளும், புருவங்களும், தலையில் கேசங்களும் எரிந்து வெந்து விட்டன. இரு விழிகளும், அவைகளின் உள்ளே இருக்கும் பாவைகளும் மிகவும் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டு, அதனால் அவன் எதையும் பார்க்க இயலாதவனாகஇருந்தான். விபத்து நடந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் நான் அழைக்கப்பட்டேன். காந்தாரைட்ஸ் மூன்றாவது வீரிய திரவத்தில் நனைக்கப்பட்ட லினன் துண்டு ஒன்றில் மூக்கு துவாரத்தை மட்டும் சுவாசிப்பதற்காக விட்டு விட்டு, முகத்தின் மற்ற பாகங்கள் அனைத்தையும் நன்றாக மறைத்து கட்டி விடும்படி நான் அவர்களுக்கு கட்டளை இட்டேன். முதன் முதலில் புண்களின் மேல் மருந்துபட்டு மிகவும் கொடிய வேதனை ஏற்பட்டு நோயாளி துடிதுடித்தான். எனினும் இரண்டே நிமிஷங்களுக்குள் அவ்வலி மறைந்து விட்டது. இரவு முழுவதும் அடிக்கடி மருந்துகள் ஊற்றுவது தொடர்ந்து நடந்தது. 14 மணி நேரங்களுக்குப் பிறகு முகத்தில் யாதொரு வேதனையும் இருக்க வில்லை. ஆனால், இவ்வாறு சிகிச்சை செய்யப்படாத உடலின் மற்ற பாகங்களில் புண்களும், கொப்புளங்களும் நிறைந்து விட்டன''.

பவேரியாவில் (Bavaria) புசிக்கப்படும் கரு முள்ளங்கிக் கிழங்கு (Black radish) மிகவும் அதிகப்படியான அசீரணத்தை விளைவித்து,



அடிவயிறு அதிகமாகப் பருத்து அடிக்கடி வீங்கிக் கொள்வதற்குக் காரணமாக அமைகிறது. இந்த மாதிரியான நோய் நிலைமையை நிவர்த்திக்கும் சிறந்த மருந்துகளில் ஒன்றாக ராபனஸ் சட்டிவஸ் (Raphanus Sativas) என்று இலத்தின் மொழியில் சொல்லப்படும் கருமுள்ளங்கிக் கிழங்கு விளங்குகிறது.

'ஒத்தவை ஒத்தவையைக் குணப்படுத்தும்' என்ற தத்துவத்தை மேற்கூறியவைகளைப் போன்ற உதாரணங்களைக் கொடுத்து விளக்கப் புகுந்தால், இன்னும் ஐம்பது பக்கங்களை என்னால் நிரப்பமுடியும்.

வியாதிக் குறிகளை ஒத்த ஒரு மருந்தால் கூட அல்ல, அதனோடு ஒப்பிடத்தக்க வேறு ஒரு மருந்தை மிக நுண்ணிய அளவில் கொடுப்பதினாலேயே அந்த வியாதியை நிவர்த்தி செய்து விடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பல ஆண்டுகளாக, உப்பை, அதிக அளவில் உட்கொண்டு தங்கள் உடல் நலத்திற்கு கேடு சூழ்ந்து கொண்டவர்கள், மிக நுண்ணிய அளவில் உப்பை உபயோகித்து, குணமடையலாம். இது பற்றி உப்பின் மகிமை என்ற தலைப்பில் பின்னொரு அத்தியாயத்தில் விவரிக்கப்படும்.

பித்தப்பையில் ஏற்படும் ஒரு வகை கட்டியை (Gallstones) அதைக்கொண்டே தான் குணப்படுத்த வேண்டும். இது பற்றி டாக்டர் கிளார்க் என்பார் எழுதியுள்ள 'மெட்டிரியா மெடிகாவின் அனுபவ அகராதி' (Dictionary of practical Materia Medica) என்ற புத்தகத்தில் கல்கேரியா ரினலிஸ் (Calcarea Renalis; பித்தப்பை கட்டி) என்ற தலைப்பில் பின்வரும் விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

'எர்விட்டி' (Erwitte) என்ற நகரைச் சேர்ந்த டாக்டர் டிரடினால் (Dr. Dredenoll) என்பார் எழுதியுள்ள ஒரு கட்டுரையை 'ஹோமியோபதி ரிகார்டர்' (Homoeopathic Recorder) என்ற சஞ்சிகை மறுமுறையும் வெளியிட்டுள்ளது. அதில் அந்த மருந்தினால் தனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவத்தைப் பற்றி அவர் விவரித்துள்ளார். மீண்டும் மீண்டும் தோன்றித் தொந்தரவு கொடுக்கும் வியாதியின் வெளித் தோற்றத்தைத் தொடர்ந்து, அவர் பல்வேறு உபத் திரவங்களால் அவதியுற்றார். அவைகளில், சிறுநீரகக் குடல் வலியே (Renal Colic) அவரை மிகவும் கொடுமையாகவும், கடுமையாகவும் தாக்கிற்று. அதன் விளைவால் பித்தப்பைக் கட்டிகள் கலந்த சிறு நீர் அமிலம் அவருக்கு சிறுநீருடன் வெளிவந்தது. அக்கட்டிகளில் ஒன்றை எடுத்து அதன் 5 பங்குகளை 95 பங்கு சர்க்கரை மாவுடன் (Sugar of Milk) சேர்த்துத் தூளாக்கி வீரியப்படுத்தினார். இந்த மருந்தை வேளைக்கு அரை கிரையின் அளவில் உட்கொண்டு வந்ததால் சிறிது காலத்தில் அவருக்கு ஏற்பட்ட பித்தப்பைக் கட்டிகள் மறைந்துவிட்டன. பற்களில் உருவாகி ஒட்டிக்கொண்டிருந்த ஊத்தைக் கறைகளும் உதிர்ந்து, பற்கள் வெண்ணிறம் பெற்றன. வலது கை நடு விரல் தசைகளை எலும்புடன் இணைக்கும் நீட்டு தசை நாரில் ஏற்பட்டிருந்த கரடுமுரடான கணுக்கள் கரைந்து மறைந்துவிட்டன.

ரேடியம் (Radium) என்ற கனிப்பொருள் புற்றுநோயைத் தோற்றுவிக்கும் தன்மையுடையது என்பது உங்களுக்குத் தெரியும். ரேடியத்தோடு வேலை செய்யவேண்டியவர்களின் கரங்கள், மிகுந்த ஒளியும் தீவிரமும் உடைய கொடிய ரேடியக் கதிர் அலைகளால் தாக்குண்டு, எரிந்து, கரிந்துபோய்விடுகின்றன. அதனால் அவர்களுக்கு கைகளில்

புற்று ஏற்படுகிறது. புற்று நோயால் அவதியுறுவோருக்கு, ரேடியம் உதவியளிக்கும் என்பதும் அந்த நோயை அது, குணப்படுத்தக்கூடியது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. ஆர்ஸனிகத்தோடு வேலை செய்பவர்கள் அல்லது ஆர்ஸனிக மருந்தை அதிக அளவில் உட்கொண்டவர்கள் ஆகியஇவர்களுக்கு ஆர்ஸனிக் கான்ஸர் (Arsenic Cancer) என்று சொல்லப்படும் ஒரு புதுரக புற்று நோய் தோன்றுகிறது. பன்னெடுங் காலமாகத் தோலில் ஏற்படும் புற்றுகளுக்கு ஆர்ஸனிக் களிம்பைத் தடவி ஓரளவு குணமும் கண்டுள்ளனர். புற்றுநோய் வியாதியஸ்தர்களுக்கு நுண்ணிய அளவில் ஆர்ஸனிக்கை உட்கொள்ளக் கொடுத்து அந்தக் கொடிய வியாதியை ஹோமியோபதியர்கள் நிவர்த்திக்கின்றனர்.

ஒத்தவை ஒத்தவைகளைக் குணப்படுத்தும் என்ற தத்துவத்தைச் சில மேற்கோள்களைச் சுட்டிக் காட்டிச் சித்தரிக்க விரும்புகிறேன். 'ஹோமியோபதி உலகம்', (Homoeopathic World) என்ற புத்தகத்தின் 37-வது தொகுதியில் 'ஆலோவால் நிவர்த்திக்கப்பட்ட நீடித்த வயிற்றுப் போக்கு' என்ற தலைப்பின் கீழ், டாக்டர் ஜே. ஆர். பி. லாம்பர்ட் என்பார் சிகிச்சை செய்த ஒரு கேஸைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை இங்கே நாமும் விவரிக்கிறோம்.

"திருமதி............ என்பாருக்கு வயது 40. கடந்த பல ஆண்டுகளாக அந்த அம்மையார் காலையில் ஏற்படும் வயிற்றுப் போக்கால் அவதியுற்று வந்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் துயிலெழுந்ததிலிருந்து 10-மணி வரை மலப் போக்கு ஏற்படும். மலம் மஞ்சள் நிறமாகவும், குழகுழப்பாகவும் வாய்வு பறிதலுடன் கூடியதாகவும் இருக்கும், ஒரு நிமிடம்கூட தாம


நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

**ஹோமியோபதி மெட்டீரியா மெடிகா**

(தமிழ்)

இரண்டு
பாகங்கள் கொண்டது

ஆசிரியர்:
டாக்டர் V. R. மூர்த்தி

ஹோமியோபதி மருந்து வகைகளின் குண நல விளைவுகளைப் பற்றி பற்பல ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ள அரிய நூல்களின் கருத்துக்களை எல்லாம் ஒன்று திரட்டி அனுபவத்தின் அடிப்படையில் இனிய, எளிய தமிழில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஹோமியோபதியர் கரத்திலும் கருத்திலும் இருக்க வேண்டிய உயர்ந்த நூல்.

பாகம் ஒன்று விலை
ரூ. 10-00

இந்தியன் ஹோமியோபதி
இன்ஸ்டிடியூட்
கும்பகோணம்




திக்க முடியாமல் உடனடியாகக் கழிக்கவேண்டிய மலஜல வேட்கையாக இருக்கும். இக்கேஸில், ஆலோ 30 வீரியத்தில் காலையிலும் இரவிலும் கொடுக்கப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆலோ மருந்தை நான்கு வேளைகள் மட்டும் உட்கொண்ட பிறகு, அதாவது இரண்டு நாளில், மலப் போக்கில் சாதாரண ஸ்திர நிலைமை ஏற்பட்டது. அதன் விளைவால் தேக முழுவதும் சொறி சிரங்குகள் ஏற்பட்டன. அந்த அம்மாளைத் துருவித்துருவி கேள்விகள் கேட்ட பிறகு பின்வரும் விபரங்கள் வெளியாயின. அந்த அம்மையார் 10 வயது சிறுமியாக இருந்தபொழுது. சொறி சிரங்கு ஏற்பட்டது. அதை நிவர்த்திக்க ஸல்பர் களிம்பும், பன்றிக் கொழுப்பும் உடல் எங்கும் தடவப்பட்டது. அதிலிருந்து ஏறக்குறைய 30 ஆண்டுகளாக வயிற்றுப்போக்கு அவரை விட்டுப் பிரியாமல் வாட்டி வந்தது அவருக்கு தற்சமயம் மேற்கொண்டு எவ்வித மருந்தும் கொடுக்கப்படவில்லை. உடல் முழுவதிலும் சொறியை உண்டாக்கிய அதே மருந்தின் சக்தியால், மூன்றே நாளில் சொறிசிரங்கு என்ற அந்த சரும நோயும் குணமாகிவிட்டது. அதன் பிறகு வயிற்றுப் போக்கு அந்த அம்மையாருக்கு ஏற்படவேயில்லை."

ஆலோ மருந்தை 30 வீரியத்தில் கொடுத்து மேற்கண்ட கேஸில் குணமாக்கப்பட்டுள்ளது என்பதை நன்கு கவனிக்க வேண்டும்.

[தொடரும்]

## *டாக்டர் V. R. மூர்த்தி அவர்களின் ஆகஸ்டு, செப்டம்பர் மாதத்திய நிகழ்ச்சிகள்.*

| | | |
|---|---|---|
| 19—8—59 to 22—8—59 | ... | சென்னை |
| 23—8—59 | ... | கோயம்புத்தூர்; கோவை மாவட்ட ஹோமியோபதி டாக்டர்கள் சங்க துவக்க விழாவில் கலந்துகொள்ளல். |
| 24—8—59 | ... | சென்னை |
| 26—8—59 to 29—8—59 | ... | கும்பகோணம் |
| 30—8—59 | ... | குடந்தை வட்ட பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கக் கூட்டத்தில் சொற்பொழிவு |
| 31—8—59 to 7—9—59 | ... | கும்பகோணம் |

# கருச்சிதைவின் அறிகுறிகள்

டாக்டர் (திருமதி) எஸ். ஏ. ராதா
(Medical Officer, Womens's & Children's Clinic, I. I. H.)

## கருச்சிதைவு ஏற்படுவதற்கான அறிகுறிகள்:

1. கருப்பை சுருங்கிக் கொள்வதால் ஏற்படும் வலி.

2. கரு அணு பிரிக்கப்படுவதால் ஏற்படும் இரத்தக் கசிவு.

3. கருப்பையின் கழுத்துப் பகுதி அகன்றிருத்தல்.

4. கருப்பையில் உள்ள கருப் பொருள்கள் வெளியேற்றப்படுதல்.

பொதுவாகச் சொல்லுமிடத்து, கருச்சிதைவின் ஆரம்பமானது, எனது முந்திய கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அடிப்படையாகக் கொண்டு ஏற்படுகிறது. கருச்சிதைவு ஏற்படும் பொழுது, அடிவயிற்றின் கீழ்ப்பகுதியில்,குறிப்பாக முதுகெலும்பின் கீழ் பாகத்தில் தெறிக்கும் வலி தோன்றுவதுடன் யோனித் துவாரத்தின் வழியாக இரத்த ஒழுக்கும் ஏற்படும். இடுப்பு வலி, மெல்ல மெல்ல அதிகரித்து கொண்டே வந்து, முடிவில் பிரசவ வலியை ஒத்த வேதனையையும், இலகுவானதும் ஏராளமான இரத்த பெருக்கத்தையும் விளைவிக்கும். இந்த நிலையில் கருச்சிதைவு தவிர்க்க முடியாதது என்ற கட்டம் பிறக்கும் பொழுது, பொறுக்க முடியாத கொடிய வேதனை, ஒரு குறிப்பிட்ட இடைவேளைக்குப் பிறகு, அடிக்கடியும் அதிகமாகவும் ஏற்படும். இது போது கரு அணு மரணமடைந்து கருப்பையின் உட்புறச் சுவற்றிலிருந்து பிரிக்கப்படுகிறது. கருப்பையின் கழுத்துப் பகுதி அகன்று விரிவடைந்து விடுகிறது. முடிவில் கருப்பையில் உள்ள கருப் பொருளில் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ, மிகுதியான இரத்தப் பெருக்குடன் வெளியேற்றப் படுகிறது. அதன்பிறகு, வலி நின்று இரத்தக் கசிவு குறைந்து, கருப்பையின் கழுத்துப் பகுதி பழைய ஒழுங்கு நிலைக்கு வருமானால், கருச்சிதைவு முற்றுப் பெற்றுவிட்டதாகக் கருதப்படும்.

எனினும், கருப்பொருளின் ஒரு பகுதியோ அல்லது கரு அணுவோ வெளியேறாமல் கருப்பையினுள் தங்கி, அரை குறை கருச்சிதைவு ஏற்பட்டு விடுமானால், அத்தகைய கருச்சிதைவின் காரணமாக அபாயகரமான இரத்தப் பெருக்கு ஏற்பட்டு சில சந்தர்ப்பங்களில் அதனால் உயிருக்கே ஆபத்தும் சம்பவிப்பதுண்டு. கருப்பமுற்ற ஆரம்ப நாட்களில் நிகழும் கருச்சிதைவினால் ஏற்படும் அபாயம், கரு முதிர்ந்த நிலையில் ஏற்படுவதைக் காட்டிலும் குறைந்ததாகவே இருக்கிறது. கருச்சிதைவைத் தூண்டிவிடக் கூடிய காரணங்களின் தன்மையைப் பொருத்து, சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், மேற்சொல்லிய குறிகளுடன், நடுக்கம், மயக்கம், வாயாலெடுப்பு, நெஞ்சுத் துடிப்பு ஜுரம், பசியின்மை முதலிய அறிகுறிகளும் தோன்றலாம்.

## வியாதி நிர்ணயம்:

ஒரு பெண் தனக்கு சுமார் ஓரிரு மாதங்களாக மாதவிடாய் ஏற்படவில்லை என்றும், இப்போது அடிவயிற்றில் நச்சு வலியும், யோனியின் வழியாக இரத்தக் கசிவும் ஏற்படுகிறது என்றும் கூறினால், பரிசோதிக்கும் டாக்டர்



முதன் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம், இதுவரை அவளுக்கு மாதவிடாய் அமுக்கப் பட்டிருந்து இப்பொழுது வெளி வருகிறதா அல்லது கருப்பச் சிதைவுக்கான அறிகுறிகள் தோன்றி பயமுறுத்துகின்றனவா என்பதேயாகும். மிக உன்னிப்பாக நோயாளியைப் பரிசோதிக்கும் பொழுது, கருப்பையின் கழுத்துப் பகுதி விரிவடையாமலும் கருப்பையானது, அளவில் அதிகரிக்காமலும், உருவில் மாறுதல் அடையாமலும் இருக்குமானால் இந்த நிலைமை, வலியுடன் மாதவிடாய் ஏற்படுகிறது என்பதல்லாமல் கருத்தரித்து, பிறகு அதன் சிதைவு ஏற்படுவதாக ஆகாது. இதற்கு மாறாகப் பொறுக்க முடியாத கொடிய வலியும் கருப்பையின் கழுத்துப் பகுதியின் விரிவும் ஏராளமான இரத்தப் பெருக்கும் இருக்குமானால் இத்தகைய நிலைமைகள் நிச்சயமாகக் கருச்சிதைவையே குறிக்கும், பரிசோதனையின் மூலம் கருப்பமுற்றிருப்பது தெளிவானால், அப்பொழுது தோன்றுகிற குறிகளை ஆராய்ந்து, அறிகுறிகள் தோன்றி அச்சுறுத்தும் கருச்சிதைவா அல்லது தவிர்க்க முடியாத கருச்சிதைவா என்பதை நிச்சயிக்க வேண்டும். தவிர்க்க முடியாத கருச்சிதைவுகளின் முக்கிய குறிகள் பின் வருமாறு ஆகும்.

1. கருப்பையின் கழுத்துப் பகுதி விரிவடைந்து அதன் வழியாக கரு அணு வெளியில் தள்ளப் படுவதுடன் ஏராளமான இரத்த பெருக்கும் ஏற்படுதல்.

2 இரத்தப் பெருக்குடன் கருப் பொருளின் ஒரு பகுதி வெளியில் தள்ளப்படுதல்.

3. அடிக்கடி இரத்தப் பெருக்கு ஏற்படுதல்.

4. கருப்பை உருவில் சிறியுதாகச் சுருங்கி விடுதல்,

5. உடல் நலத்திற்குக்கேடு சூழும் போக்குகளுடன் காய்ச்சல் ஏற்படுதல்.

கருப்பையின் சதைப் பிண்டம் கருவைப் போன்று வளர்ந்து சுருங்குதல், கருப்பையில் கட்டி ஏற்படுதல் ஆகிய நிலைமைகளில் யோனிக் குழல் வழியாக இரத்தம் கசியும்பொழுது. இந்நிலைமைகளும் கருச்சிதைவும் வெவ்வேறானது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இம் மாதிரியான கேஸ்களில் அறுவை முறை கையாளப்படவேண்டியது அவசியமாகிறது.

## சிகிச்சைகள்:

கருச்சிதைவால் ஏற்படும் முக்கியமான ஆபத்து, சில சமயங்களில் உயிருக்கே அபாயம் விளைவிக்கும் இரத்தப் பெருக்கைத் தோற்றுவிப்பதாகும். ஆகவே ஒரு வைத்தியர் கருச்சிதைவுக்குரிய ஒரு கேஸில் சிகிச்சை செய்ய அழைக்கப்படும் பொழுது அவர் செய்ய வேண்டிய முதல் வேலை-முக்கியமான வேலை, ஒன்று உடனடியாக இரத்தப்பெருக்கை நிறுத்தி, கரு வளர்வதற்கு வழிசெய்ய வேண்டும்; அல்லது முழு கருச்சிதைவையும் விளைவித்து இரத்தப் பெருக்கை நிறுத்தி, தாயைக் காப்பாற்ற வேண்டும். நோயாளிக்கு மருந்து கொடுக்கும் முன்னர், இப்பொழுதுள்ள நோய் நிலைமை, அறிகுறிகள் காட்டி அச்சுறுத்தும் கருச்சிதைவா அல்லது தடுக்க முடியாத கருச்சிதைவா என்பதை ஆராய்ந்து நோயின் தன்மையை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்.

கருச்சிதைவுக்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு, மூர்க்கமான உடல் அதிர்ச்சி அல்லது கிளர்ச்சியினால் கருச்சிதைவு ஏற்படுவதாக இருந்தால் நோயாளிக்கு தைரிய மூட்டி இரத்தக் கசிவு நிற்கும்வரை முற்றிலும் ஓய்வு எடுத்துக்

கொள்ளவேண்டும் என்றும் நல்ல சத்துள்ள திரவ ஆகார வகைகளையும் தக்க மருந்துகளையும் உட்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

### வைபூர்ணம் 30:

கருச்சிதைவுக்கான அறிகுறிகள் தென்படும் பொழுது, அரை மணிக்கு ஒருவேளை வீதம் இம் மருந்தைக் கொடுத்தால், இரத்தக் கசிவு தடுக்கப்பட்டு கருவளர்ச்சி ஏற்படும்.

### அகோனைட் 30:

பயத்தின் காரணமாகக் கருசிதைவு நிகழும்பொழுது, இதைக் கொடுப்பதால் நல்ல விளைவுகள் ஏற்பட ஏதுவாகிறது.

### ஓபியம் 6 அல்லது 30:

கருச்சிதைவுக்கான அறிகுறிகள் தோன்றி அச்சுறுத்தும் பொழுது இம் மருந்தைக் கொடுத்து வெற்றி பெற்றுள்ளேன். சரியான ஹோமியோபதி மருந்தைத் தக்க சமயத்தில் கொடுக்கும்பொழுது கருச்சிதைவில் வலிகளும் இரத்தப் பெருக்கும் நின்று விடுகின்றன என்பதை என் அனுபவத்தில் உணர்ந்து இருக்கிறேன். உன்னிப்பாகப் பரிசோதனை செய்தால், கருப்பையின் கழுத்துப் பகுதி சுருங்கி இருப்பதும், கருப்பை உருவில் படிப்படியாக பெருத்து வருவதும் புலனாகும்.

பிரசவ வலியை ஒத்த கொடிய வலிகளும், கருச்சிதைவிற்கான பிற அறிகுறிகளும் தோன்றி அது தடுக்கமுடியாத கருச்சிதைவு என்பதாக நிர்ணயிக்கப்படும் பொழுது சபினா தாய் திரவத்தில் வேளைக்கு 10 துளிகளை அரை அவுன்ஸ் தண்ணீரில் கலந்து 15 நிமிடங்களுக்கு ஒருதடவை கொடுத்து வந்தால் கருப்பையில் நின்றும் கருப்பொருள்களைக் காலி செய்து இரத்தப் பெருக்கையும் நிறுத்திவிடும். விரிவடைந்த கழுத்துப் பகுதியின் வழியாக கரு அணு வெளியேற்றப்படுவதானது கூபக எலும்பின் மேல்பகுதியில் ஏற்படும் அமுக்குவலியால் உணரக் கூடியதாக இருக்கும். இம்மாதிரியான நிலைமைகளில், சீழ்க் கிருமிகளால் தாக்கப்படுவதை தவிர்ப்பதற்கான முன் ஜாக்கிரதையாக யோனிக்குழலை ஆர்னிகா தாய் திரவத்தால் கழுவலாம். அதிகப்படியாகவும், தொடர்ந்தும், இரத்த ஒழுக்குகள் ஏற்படுதல், சகிக்க முடியாத கொடிய வேதனை, அல்லது ஆயுதப் பிரயோகத்திற்கு அவசியமான காரணங்கள் ஆகிய தெளிவான குறிகள் ஏதும் தென்படாத பொழுது, அவ்வப்பொழுது, ஏற்படும் அறிகுறிகளுக்கு அவசியமான ஹோமியோபதி மருந்துகளைக் கொடுத்து வருவதோடு, கருச்சிதைவை இயற்கையின் வழியில் நிகழ விட்டுவிடுவதே சரியானது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

எனது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதும் பொழுது வழக்கமாக ஏற்படும் கருச்சிதைவு (Habitual abortion)களைத் தடுக்க ஹோமியோபதி மருந்துகள் வியக்கத்தக்க பலன்களைக் கொடுக்கின்றன என்று குறிப்பிட விரும்புகிறேன். இதுவரை நான் வெற்றிகரமாக சிகிச்சை செய்துள்ள அனேக நோயாளிகளைப் பற்றியும், இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டாரின் பெண்கள் குழந்தைகளுக்கான பிரத்தியேக வைத்திய விடுதியில் இப்பொழுது அன்ருடம் என்னால் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை செய்யப்படும் பற்பல கேஸ்களைப் பற்றியும் தீர்க்கமாக ஆராயும் பொழுது ஹோமியோபதி மருந்துகளைக் கொண்டு குறித்த பலனை விளைவிக்கமுடியும் என்பது எனது



திடமான நம்பிக்கையாகும்' ஒரு பெண் தனக்கு ஏற்படும் வழக்கமான கருச்சிதைவைப் பற்றிய விபரம் கொடுக்கும்பொழுது ஸிபிலிஸ் என்று சொல்லப்படும் கிரந்தி நோய், விஷக் கிருமிகள் இரத்தத்தில் கலந்திருத்தல் (Toxaemia) நீரழிவு, கருப்பை நிலை குலைந்திருத்தல், கருப்பையின் கழுத்துப் பகுதி அரிக்கப்பட்டிருத்தல், ஆகார வகையில் ஏற்படும் உயிர்ச் சத்துப் பற்றாக் குறை, ஆகிய பிரதான காரணங்களில் எக் காரணத்தால், ஏறக்குறைய எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்ட ஒரே மாதத்தில் வழக்கமாகக் கருச்சிதைவு ஏற்படுகிறது என்பதை ஒரு வைத்தியர் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். இத்தகைய கருச்சிதைவுக்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவைகளை வேருடன் களைந்தெறியத் தக்க நிவாரண முறைகளை மேற்கொண்டால், கருச்சிதைவுகள் தடுக்கப்பட்டு ஒழுங்கான, சுகப்பிரசவம் ஏற்பட ஏதுவுண்டு. ஹோமியோபதி முறையில் அறிகுறிகளுக்கு தக்கவாறு, அலெட்ரிஸ் பாரினோசா தாய்த்திரவம், கல்கேரியா கார்ப், சபினா பல்ஸடில்லா முதலிய மருந்துகளை வழக்கமாக ஏற்படும் கருச்சிதைவு கேஸ்களில் குறிகளுக்குத் தக்கவாறு கொடுக்கும் பொழுது ஆச்சரியமான முறையில் அவை வேலைசெய்யக் காண்கிறோம்.

காய்ச்சலால் ஏற்படும் கருச்சிதைவுகளை பைரோஜன் 200x விகிதத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாளும் லாக். லாக். நாள் ஒன்றுக்கு 3 வேளைகள் 3 கிரெயின் அளவிலும் கொடுத்துவந்தால், நல்லபலன் ஏற்படும். காலையிலும், மாலையிலும் காலண்டுலா தாய் திரவத்தைக் கொண்டு யோனிக் குழலை கழுவுதல் அவசியமாகும். அகோனைட் 6x வீரியத்திலும், ஆர்னிகா 6 வீரியத்திலும் கொடுப்பதும் நல்லது. சில நாட்களுக்குள் காய்ச்சல் குறைந்து கருப்பையிலுள்ள கருப் பொருள்கள் வெளியேற்றப்பட்டதும், கருப்பை தனது பழைய ஒழுங்கு முறைக்குச் சுருங்கி விடுகிறது.

---


## ஸ்டிங்யூரா

**தேள் கொட்டுக்கும், விஷப்பூச்சிகளின் கடிக்கும் நிகரற்ற நிவாரணி**

உபயோகிக்கும் விதம் :

கொட்டோ, கடியோ சரீரத்தில் வலது பாகத்தில் இருக்குமாயின் இடது காதில் 2 துளிகள் விடவும். இடது பாகத்தில் கொட்டினுல் வலது காதில் விடவும். இரண்டே நிமிஷங்களில் வலி சமனப்படும். சிறிது வலி இருப்பின் அதேபோல் கண்ணில் ஒரு சொட்டு விடவும். யாதொரு கெடுதலும் செய்யாது.

பாட்டில் விலை ரூ. 0·50 ந.பை.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
கும்பகோணம்

சென்னையில் :— 6, ஸ்டிரிஞ்சர் தெரு, சென்னை–1

# சென்னை மாநில பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கங்களின் கூட்டணி

சென்ற 19—7—59-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கூட்டணியின் முதல் பொதுக்குழு திருச்சி சின்னையா பிள்ளை சத்திரத்தில் கூடி டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்களை தலைவராகத் தேர்ந்தெடுத்த விபரத்தை சென்ற மாத "ஹோமியோபதி" இதழில் சுருக்கமாக வெளியிட்டுள்ளோம். கூட்டணியின் நடவடிக்கைகளைப் பற்றிய விபரங்களைக் கீழே தருகிறோம்.

திருச்சி, திருநெல்வேலி, மதுரை, கும்பகோணம், கோயம்புத்தூர், ராஜபாளையம், உடையார்பாளையம், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, பல்லடம், சேலம், அம்பாசமுத்திரம், திண்டிவனம், நீலகிரி, கிருஷ்ணகிரி, முதலிய தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் பொதுக் குழு கூட்டத்திற்கு வருவதாக இருந்தார்கள். ஒரு அவசர அலுவல் காரணமாக அவர்கள் வர இயலாமல் போகவே தனது பிரதிநிதிகளை அனுப்பி இருந்தார்கள். ஏனைய மூன்று இன்ஸ்டிடியூட்டுகளின் டைரக்டர்களும் பொதுக் குழுவின் நடவடிக்கைகளை ஆதரித்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பி இருந்தனர்.

டாக்டர் ராமானுஜ அனந்தர் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பம் ஆகியது. பிரார்த்தனைக்குப் பிறகு, தலைவர் அவர்கள் முன்னுரையாக சில வார்த்தைகள் பேசினார். அதன் பிறகு கூட்டணியின் சட்ட திட்ட நகல் அறிக்கை ஒவ்வொரு பிரிவாக வாசிக்கப்பட்டு, சிற்சில திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1959-60ம் ஆண்டிற்கு பின்வரும் அலுவலக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் (கவர்னிங் டைரக்டர், இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட், கும்பகோணம்& சென்னை)

துணைத்தலைவர்கள்: டாக்டர் ராமனுஜ அனந்தர் பி.ஏ. பி.எல் (அகில தமிழ் நாட்டு ஹோமியோபதியர் சங்கம், திருச்சி)
டாக்டர் எஸ். சீனிவாசன் (டைரக்டர் ஹானிமன் ஹோமியோ இன்ஸ்டிடியூட் திருவாரூர்)
டாக்டர் வி. ஆர். சுப்ரமணியம், மதுரை.

பொதுச்செயலாளர்: டாக்டர் எம். கோபாலகிருஷ்ணன், மதுரை.

துணைச்செயலாளர்: டாக்டர் கே. சுப்பராவ், மதுரை.

பொருளாளர்: டாக்டர் வி. மஹாதேவன், திருச்சி

செயற்குழு அங்கத்தினர்கள்:

1. டாக்டர் வி. எஸ். ஸுப்ரமணியம், ஹோமியோபதி ஹவுஸ் சென்னை.
2. டாக்டர் வி. ஜே. ராவ், நெல்லிக்குப்பம்
3. டாக்டர் ஈ. பி. எம். சுவாமி. சேலம்
4. டாக்டர் பி, ஆர். சந்திரன் திருநெல்வேலி
5. டாக்டர் ஆர். ஏ. மூக்கப்ப செட்டியார், கோயம்புத்தூர்.
6. டாக்டர் கே. எம். ஏ. வஹ்ஹாப், திண்டிவனம்.
7. டாக்டர் பி. மஹபூப், இராமநாதபுரம்.



8. டாக்டர் எச். செல்வராஜ், புதுக்கோட்டை.
9. டாக்டர் டி. கே. வர்மா நீலகிரி.
10. டாக்டர் கே. ஆலயம், கோயம்புத்தூர்.
11. டாக்டர் டி. கே. ராயலு, கன்னியாகுமரி.
12. டாக்டர் ஈ. அப்துல் ஜப்பார், திருச்சி.

அலுவலக நிர்வாகிகள் அனைவரும் ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) சென்னை மாநிலத்தில் தொழில் புரிந்துவரும் பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் அனைவரும் தங்களுக்கு அருகில் உள்ள "பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்" ஒன்றில் உடனடியாக அங்கத்தினர்களாக சேரவேண்டும் என்றும், அப்படிப்பட்ட சங்கங்கள் யாவும், சென்னை மாநில பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் கூட்டணியில் தாமதமின்றி இணைந்துவிட வேண்டும் என்றும், அப்பொழுது தான் எதிர் காலத்தில் நமது தொழில் துறையைப் பாதிக்கும் எந்த விஷயத்தையும் நாம் ஏகோபித்து, நமது உரிமைக் குரலை ஒற்றுமையோடு முழக்க முடியும் என்றும் இந்தக் கூட்டணி மிகமிக வலியுறுத்திக் கூறுகிறது.

(2) சென்னை மாநிலத்தில் ஹோமியோபதி மருத்துவக் கலையைப் போதிப்பதிலும், தொழில் நடத்துவதிலும் ஒழுங்கு முறைகளை நிர்ணயிக்க சட்டதிட்டங்களை இயற்ற இருக்கும் சென்னை அரசாங்கம், சட்ட திட்டங்களை வகுப்பதற்கான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வரையறுத்துக் கொள்ளுமுன், தமிழகத்தின் பிரதான ஹோமியோபதி ஸ்தாபனங்கள் யாவும் அங்கம் வகிப்பதும், துவக்கத்தில் 20 சங்கங்கள் வரை இணையப் பெற்றதுமாகிய இந்தக் கூட்டணியை ஹோமியோபதியைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்திலும் கலந்துகொண்டு ஆவன செய்யுமாறு அரசாங்கத்தை இக் கூட்டணி வேண்டிக் கொள்கிறது.

(3) சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு தற்பொழுது தொழில் புரிந்துவரும் ஹோமியோபதி வைத்தியர்கள் அனைவரையும் அங்கீகரிக்கும் ஷரத்து இயற்றப்படவிருக்கும் புதிய சட்டத்தில் இடம் பெறவேண்டும் என்பதோடு ஹோமியோபதியை அரசாங்கம் அங்கீகரிப்பதின் விளைவால் புதிதாகத் திறக்கப்படவிருக்கும் ஹோமியோபதி வைத்திய நிலையங்களிலும், மருந்தகங்களிலும் டாக்டர்கள், வைத்தியர்கள் மருந்து கலப்பவர்கள், மகப்பேறு மருத்துவ உதவியாளர்கள் ஆகியோரை வேலையில் அமர்த்தும் பொழுது எதிர் காலத்தில் இத் தொழில் துறையில் புதிய சட்டத்தின்படி பயிற்சி பெறப்போகும் வைத்தியர்களுடன் இப்பொழுது தொழில் புரிந்து வரும் தகுதி வாய்ந்த ஹோமியோபதி வைத்தியர்களுக்கும் சமசந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று இந்த கூட்டணி அரசியலாரை மிகவும் பணிவன்போடு வலியுறுத்துகிறது.

(4) மேற்கூறிய தீர்மானங்களை சென்னை அரசாங்க சுகநல அமைச்சருக்கு அனுப்பி வைக்க பொதுச் செயலாளருக்கு அதிகாரமளிக்கிறது. நமது கருத்துகளை அமைச்சரிடத்தில் நேரில் விளக்கி வற்புறுத்த ஒரு தூதுக்குழுவை அமைத்துக்கொள்ள தலைவர் அவர்களை கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

148857

பொதுச் செயலாளர் அவர்கள் தலைவர் அவர்களைச் சந்தித்து பொதுக்குழுவின் நடவடிக்கை களைப் பற்றி எடுத்துக் கூறிய பொழுது டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள், தன்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு அங்கத் தினர்கள் அனைவருக்கும் மிகவும் நன்றி செலுத்தினார்கள். தன்மீது சுமத்தப் பட்டிருக்கும் புதிய பொறுப்புகளை உணர்ந்து தன்னால் இயன்றவரை பொது நலனுக்குப் பாடுபடுவதாக உறுதி கூறினர் கள். தனிநபர் எவ்வளவுதான் ஆற்றலும், ஆர்வமும் உள்ளவராக இருந்த போதிலும், சகோதர அங் கத்தினர்களின் முழு ஒத்துழைப் பும் இருந்தால்தான் எந்த சங்க மும் செவ்வனே செயல்பட முடியும் என்றும், இது விஷயத்தில் அனைவரது இதய பூர்வமான ஒத்துழைப்பையும் தான் கோரு வதாகவும் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் கூறினர்கள்.


## வீட்டு வைத்தியம்

வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் சாதாரண நோய் களுக்கு நாமே வைத்தியம் செய்துகொள்வதன் மூலம் வீணாக ஏற்படும் செலவுகளையும் சிரமங்களையும் வெகுவாகக் குறைத் துக்கொள்ளலாம்.

எட்டு வகை நிவாரணிகளைக் கொண்ட 'பஹோலா வீட்டு ஔஷதங்கள்' ஒரு செட் உங்கள் கைவசம் இருப்ப தானது உங்களை ஒரு அவசரகால வைத்தியராகவே ஆக்கி விடும்.

மருந்துகள் யாவும் அழகிய பெட்டிகளில் உபயோக விபரத்துடன் அடக்கம் செய்யப்பட்டு, பெரியசெட், சிறிய செட் என இருவகையாக விற்பனைக்குத் தயாராகவுள்ளன.

| | |
|---|---|
| பெரிய செட் ஒன்றின் விலை | ரூ. 5—00 |
| சிறிய செட் ஒன்றின் விலை | ரூ. 3—00 |

அனுப்பும் செலவு தனி.

இலவச விபரத்திற்கு இன்றே எழுதுங்கள்.

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்**

ஹோமியோ ஹவுஸ் :: கும்பகோணம்




## சங்க நடவடிக்கைகள்

**செங்கல்பட்டு:** ஹோமியோபதி டாக்டர்களாக ஜில்லா கலெக்டர் களிடம் பதிவு செய்துகொள்ள சென்னை சர்க்கார் G. O. M. S. 142, டெவலப்மெண்ட் 12—1—52 ஆர்டர்படி செங்கற்பட்டு ஜில்லா வில் தொழில் நடத்திக்கொண்டி ருக்கும் பல ஹோமியோபதி டாக் டர்கள் அனுப்பி இருந்த விண்ணப் பங்கள் மேற்படி ஜில்லா கலெக்ட ரால் நிராகரிக்கப்பட்டு விட்டன. கலெக்டர் அவர்களின் ஆர்டரில் கூறப்பட்டுள்ள காரணம் மேற்படி ஹோமியோபதி டாக்டர்களுக்கு வைத்தியத்தொழில் புரிவதற்கான போதுமான நேர்முகப் பயிற்சி இல்லை என்பதாகும். இக்காரணம் தற்சமயம் இவ்வைத்திய முறையில் பயிற்சி பெற உள்ள வசதிகளின் படியும், மேற்படி G. O. வின் படி யும் சற்றும் பொருந்தாது என்ப தால், இது சம்பந்தமாக மேற் கொண்டு ஆலோசனை செய்ய, மேற்படி ஹோமியோபதி டாக்டர் களின் கூட்டம் ஒன்று, சென்ற 9-8-59 ஞாயிற்றுக்கிழமை அன்று இந்தியன் ஹோமியோபதி இன்ஸ் டிடியூட், சென்னைக் காரியாலயத் தில் டாக்டர் K. V. ஸ்வாமி அவர் களால் கூட்டப்பட்டது. கூட்டம் சரியாக 2 மணிக்கு துவங்கிற்று. வந்திருந்தோர் அனைவரையும் டாக்டர் K. V. ஸ்வாமி அவர்கள் வரவேற்று, கூட்டத்திற்கு எதிர் பாராத விதமாக விஜயம் செய் திருந்த இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டின் கவர்னிங் டைரக்டர் டாக்டர் V. R. மூர்த்தி அவர்களைக் கூட்டத்தை நடத்திக் கொடுக்குமாறு கேட்டுகொண்டார்.

டாக்டர் V. R. மூர்த்தி அவர்கள் இவ்வைத்திய முறை சம்பந்தமாக சர்க்காரால் இதுவரையில் செய்யப் பட்டுள்ள சட்ட திட்டங்களையும், G. O. M. S. 142 ன் நோக்கத்தை யும் நன்கு விளக்கினர்கள். வந்தி ருந்தவர்களிடத்தில் நடத்தப்பட்ட விசாரணை முறைகளையும் விசாரித் தார்கள். இது சம்பந்தமாக ஒரு சிலரிடத்தில் விசாரணை ஏதுமின் றியே விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டிருப்பதும் ஒரு சிலருக்கு வைத்திய முறைகளில் நல்ல பயிற்சியும், பலவருட அனுபவமும் இருந்தும், அவை கவனிக்கப்படா மலிருப்பதும் தெளிவாயின. பலருக்கு நிராகரிக்கப்பட்ட விபரம் கூட அதுவரையிலும் அறிவிக்கப் படாமலிருப்பதும் தெரிய வந்தது.

முடிவில் இது விபரங்களைத் தெளிவாக விளக்கி, செங்கற்பட்டு ஜில்லா கலெக்டர் மேற்படி ஹோமியோபதி டாக்டர்களின் விண்ணப்பங்களை நிராகரித்தது சரியில்லை என்பதைத் தெளிவாக்கி போர்டு ஆப் ரெவினியூவுக்கு கூட் டத்தின் சார்பாக விண்ணப்பித்து, மேற்படி கலெக்டர் அவர்களின் ஆர்டரை மறு பரிசீலனை செய்து ஹோமியோபதி டாக்டர்களை மேற் படி G. O. வின்படி பதிவு செய்து கொள்ளக் கேட்டுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

**செங்கல்பட்டு ஜில்லா ஹோமியோ பதியர் சங்கம்:** செங்கல்பட்டு ஜில் லாவில் ஏராளமான ஹோமியோ பதியர்கள் தொழில் நடத்தி வந் தும் அங்கு ஒரு சங்கம் நிறுவப் பட்டு இதுவரையிலும் சரிவரச் செயலாற்றவில்லை என்று அறிகி ரோம். ஹோமியோபதியர்களின் உரிமைகளைக் காக்க, செங்கல்பட்டு ஜில்லாவிலும் ஒரு சங்கம் ஸ்தா பிக்க வேண்டியது அவசியம் என்ப தால், மேற்படி ஜில்லாவில் தொழில் நடத்தி வரும் ஹோமி யோபதியர்கள், தங்கள் விலாசத் தையும், இதர விபரங்களையும்,

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் சென்னை அலுவலக டைரக்டர் Dr. K. V. ஸ்வாமி அவர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கக் கோருகிறோம். கூடிய சீக்கிரம் ஒரு சங்கம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும். Dr. K.V. ஸ்வாமி டைரெக்டர், இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட் தபால் பெட்டி 1906, சென்னை-1. என்ற விலாசத்திற்கு விபரங்கள் அனுப்பவும்.

[ஆங்காங்கே ஹோமியோபதியர்கள் சங்கங்கள் இருக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி நாம் அவ்வப்பொழுது வலியுறுத்தி வருகிறோம். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கத் தீவிரமாக முயன்று வரும் டாக்டர் K. V. ஸ்வாமி அவர்களின் சேவா ஆர்வத்தைப் பெரிதும் பாராட்டுகிறோம். —ஆசிரியர்]

* * *

**சென்னை:** சென்னை மாவட்ட ஹோமியோபதி சங்கத்தின் பொதுக்குழு 21—7—59ல் கூடி, சங்கத்தின் பெயரை 'பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்' என்று மாற்றிக்கொள்வது என்றும் மாநிலக் கூட்டணியில் இணைந்து விடுவது என்றும் ஏகமனதாகத் தீர்மானித்தது. அடியிற்கண்ட அலுவலக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் M. S. V. ராவ் D. M. & S. (Cal.)

துணைத் தலைவர்கள்: டாக்டர் N. J. சைமன் M. D. (H)
டாக்டர் N. V. நரசிம்ஹமூர்த்தி M. D. (H)

கூட்டுச்செயலாளர்கள்: டாக்டர் R. T. சொக்கலிங்கம் M. D. (H)
டாக்டர் L. முர்ரே D. தாமஸ் A. M. I. H.

கூட்டுப் பொருளாளர்கள்: டாக்டர் T. R. வேணுகோபாலன்,
டாக்டர் (திருமதி) G. D. லக்ஷ்மி

செயற்குழு உறுப்பினர்கள்:
டாக்டர் K. பாலசுப்பிரமணியம்
டாக்டர் M. பழனிராஜ்.

* * *

**நாங்குனேரி:** நாங்குனேரி தாலூகா பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர் சங்கம், 26-7-59ல் Dr. ஜேசுதாஸ் மோஸஸ் அவர்கள் தலைமையில் மாவட்ட சங்க செயலாளர் டாக்டர் B. R. சந்திரன் அவர்களால், ஆரம்பித்து வைக்கப்பட்டது. நடைமுதல் ஆண்டிற்கு சங்க நிர்வாகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

**இராஜபாளையம்:** ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டமொன்று டாக்டர் N. M. P. நாகரெத்தினம் அவர்கள் தலைமையில் நடந்தது. ஹோமியோபதி மருந்துகளின் தன்மையைப்பற்றிப் பலர் பேசினர்.

**கிருஷ்ணகிரி:** வடசேலம் பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கக்கூட்டமொன்று 7-8.59ல Dr. S. ஸ்ரீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டணியின் பொதுக்குழு திருச்சியில் கூடி நிறைவேற்றிய தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன. கூட்டணியின் முதல் தலைவராக டாக்டர் V. R மூர்த்தி அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு இக்கூட்டம் தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

* * *

**தென்காசி:** தென்காசி வட்ட ஹோமியோபதியர் சங்கக் கூட்டம் டாக்டர் பி. டி. பிள்ளை அவர்கள் தலைமையில் கூடியபோது, மாவட்ட செயலாளர் டாக்டர் B. R. சந்திரன் அவர்களும் மற்றும் பலரும் பேசினர். சங்கத்தின் சார்பில் கோவாப்பரேடிவ் மெடிகல் ஸ்டோருக்கு ரூ. 300/- உதவி செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.



* * *

தென் ஆற்காடு ஜில்லா ஒலக்கூர் கிராமத்தில் டாக்டர் S. N. ஷண்முகம் அவர்களைக் கொண்டு, டாக்டர் K. M. A. வஹ்ஹாப் அவர்கள் தலைமையில், 26—7—59 அன்று 'ஹானிமென் ஹோமியோ வைத்தியசாலை' துவக்கப்பட்டது.

* * *

கூட்டணியின் பொதுச் செயலாளர் டாக்டர் M. கோபாலகிருஷ்ணன் அவர்கள் 3—8—59 அன்று வலையபூக்குளத்தில், டாக்டர் K. P. அருணாசலம் (M.D.) அவர்களின் "அருணோதய ஆஸ்பத்திரியை" திறந்து வைத்தார்.

---

148857


# மம்மடோன்—ஸி

பெண்மையின் நிறைவு தாய்மைப் பேறு பெறுதலாகும்! கருவுற்ற பெண்கள் தேக நலம் பெற்றுத் திகழ்வது இன்றியமையாதது. பலவீனத்தின் காரணமாகக் கருச்சிதைவு ஏற்படுவதும் உண்டு. கர்ப்ப காலத்தில் ஏற்படும் கோளாறுகளுக்கெல்லாம் எங்கள் 'மம்மடோன்—ஸி' மாத்திரைகள் தக்கதொரு நிவாரணியாகும்.

கருவில் வளரும் சிசுக்களை போஷிக்கவும் கர்ப்பவதிகளின் தேக வலுவைப் பாதுகாக்கவும், கஷ்டப் பிரஸவத்தைத் தவிர்க்கவும் எங்கள் "மம்மடோன்—ஸி" மாத்திரைகளை உட்கொள்ளுங்கள்!

50 மாத்திரைகள் கொண்ட பாட்டில் ஒன்றின் விலை ரூ. 2–50

தயாரிப்பாளர்கள் :

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்**

**ஹோமியோ இல்லம், :: கும்பகோணம்**

Dr. Nash's Leaders in Therapeutics.

# மூரியாட்டிக் ஆஸிட்
# (Muriatic Acid)

[நாஷ் லீடர்ஸ் இன் திராபுடிக்ஸ் என்னும் நூலிலிருந்து மொழிபெயர்ப்பு]
தமிழ் ஆக்கியோர் DR. V. R. மூர்த்தி அவர்கள்
(பிரசுர உரிமை பெற்றது)

முனகுதல் அல்லது மிகுந்த பலவீனத்தினால் படுக்கையில் சரிந்து விழுதல். (டைபாய்டு.)

நாக்கு உலர்ந்து தோல் போன்று இருப்பதுடன், இயற்கையான அளவில் மூன்றில் ஒரு பங்காக சுருங்கியும் இருத்தல். (டைபாய்டு.)

**மூலம்:** வீக்கத்துடன் நீலநிறம். துணி அதன்மேல் படுவது கூட சகிக்கமுடியாத அளவுக்கு அவ்வளவு வலி உணர்ச்சி.

மிகுந்த பலவீனம்; படுக்கையில் எழுந்து உட்கார்ந்த உடனேயே கண்கள் மூடிக்கொள்ளுதல்; கீழ்த்தாடை தொங்கிப் போதல்; படுக்கையிலேயே சரிந்து விழுதல்.

வாய் கொடுமையாகப் பாதிக்கப்பட்டு அடிப்பாகம் நீலநிறத்துடன் கூடிய ஆழமான கொடிய புண்களுடன் இருத்தல்; அருவருக்கத்தக்க அசுத்தமான சுவாசம்.

**வயிற்றுப்போக்கு:** சிறுநீர் வெளி வரும்போது தன்னிச்சையின்றி மலமும் சேர்ந்து வெளிப்படுதல். மலத்துடன் சேர்ந்து அல்லாமல் சிறுநீர் மட்டும் தனியாக வெளியேற்ற முடியாமை.

★ ★ ★

டைபாய்டு ஜுரங்களுக்கு கொடுக்கப்படும் நமது மிகச் சிறந்த மருந்துகளில் இதுவும் ஒன்று. பாஸ்பாரிக் ஆஸிட் நிலையைக் காட்டிலும் சற்றுத் தாழ்ந்த நிலையில் உள்ள டைபாய்டு ஜுரங்களுக்கு இது பிரயோஜனப்படுகிறது. கார்போ வெஜிட்டாபிலிஸுக்கு சமீபமாக, மற்ற மருந்துகளைக் காட்டிலும் இது வருகிறது.

இதன் குறிகள் "ஹெரிங்ஸ் கைடிங் ஸிம்டம்ஸ்" என்னும் நூலிலும் மற்றும் பிறநூற்களிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திரவப் பொருள்களின் சிதைவு; சிறுநீருடன் தன்னிச்சையின்றி மலம் வெளிப்படுதல்; மலம் கறுத்து மெல்லியதாகவோ அல்லது திரவ நிலையில் கருமையான இரத்தப் போக்குடனோ இருத்தல். வாய் முழுவதும் கொடிய நீலநிறப் புண்கள்; உணர்வின்மை. முனகுதலுடன் மிகுந்த பலவீனத்தினால் படுக்கையில் சரிந்து விழுதல்; கீழ்த்தாடை தொங்கிப் போதல், நாக்கு உலர்ந்து தோல் போன்று இருப்பதுடன் இயற்கையாக உள்ள அளவில் மூன்றில் ஒரு பங்காக சுருங்கியும் சுவாதீன இல்லாமலும் இருத்தல்; நாடித்துடிப்பு பலவீன



மாகவும் விட்டு விட்டும் இருத்தல். இதைக்காட்டிலும் மோசமாக உள்ள டைபாய்டு ஜுரத்தின் நிலையை வர்ணித்து எழுதுவது கடினம். இந்த நிலையில் கொயினா, பிராந்தி, அல்லது இவை போன்ற மற்ற எந்த நாகரிகமான ஊக்குவிக்கும் பொருளையும் அணுகத் தேவையில்லை. இந்நிலையில் உள்ள வியாதியஸ்தனின் உயிரைக் காப்பாற்ற என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவைகளையெல்லாம் மூரியாட்டிக் ஆஸிடும், சத்துள்ள நீர்போன்ற ஆகாரம், பால், ஓட்ஸ்கஞ்சி முதலிய உணவுகளும் செய்து முடித்து விடுகின்றன; மற்ற எந்த வைத்திய சிகிச்சையைக் காட்டிலும் விரைவாகவும், வியாதி திரும்புவதற்கு குறைந்த சந்தர்ப்பத்துடனும் செய்து முடிக்கின்றன. இம்மாதிரி நிலையில் நோயாளியின் நண்பர்கள் நிச்சயமாகக் கவலையுடனும் நம்பிக்கையற்றும் கூட இருக்கின்றனர். அப்பொழுது நாம் பிரமாதமாக வேலை செய்வது போன்ற தோற்றத்தைக் காண்பிப்பது மிகவும் அவசியம். பலவித யோசனைகளும், அல்லது வேறு யோசனைகள் பெறவேண்டுமென்றும், ஏற்கனவே இம்மாதிரி கேசுகளில் வெற்றியடைந்த பல சிகிச்சை முறைகளைப் பற்றியும், நாம் அதிகமாகத் தாக்கப்பட்டால், "ஸாக். லாக்" (Sac. Lac.) யை ஐந்து நிமிஷத்திற்கு ஒரு முறை கொடுக்கவும். இது அதிசயிக்கத் தக்க முறையில், நோயாளியின் நண்பர்களுக்கும் அனாவசியத் தொல்லை தருபவர்களுக்கும் அமைதியை ஏற்படுத்தும் மருந்தாகப் பிரயோஜனப்படுகிறது. இதை ஒருபோதும் மறக்கக்கூடாது. கூடுமானால் வைத்தியன், விஷயம் ஏதும் இல்லாவிட்டாலும் கூட, தேவையற்ற ஏதாவது ஒன்றைக் கொண்டுவரும்படி இம்மாதிரி அதிக சப்தமிடுபவனை வெகுதூரம் அனுப்புவது நல்லது. நோயாளி குணம் அடைவதற்கு இது இன்றியமையாதது. நோயாளிக்கு அதிகமான அபாயம் எதனால் ஏற்படுகிறதென்றால் இம்மாதிரியான மிரட்டல்களினால் வைத்தியன் தன் தைரியத்தை இழந்து உண்மையாக உதவும் ஒரே வழியினின்றும் அப்பால் இழுத்துச் செல்லப்படுவது தான். இந்தப் புத்திமதி தேவைப்படுகிறவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி நெருக்கடியான நிலையில் வைத்தியன் தன் புத்தி சாதுர்யத்தை இழந்துவிட்ட காரணத்தினால் அநேக நோயாளிகள் மரணமடைந்திருக்கின்றனர்.

வீக்கத்துடன் நீலநிறமும், துணி மேலே படுவதுகூட சகிக்க முடியாத அளவுக்கு மிகுந்தவலி உணர்ச்சியும் கொண்ட மூல நோய்களுக்கு, மூரியாடிக் ஆசிட் மிகவும் உபயோகப்படுகிறது.

மலப்பை சுளுவாக கீழ்நோக்கித் தள்ளப்படுகிறது. (இக்னேஷியா, ரூட்டா) அது அவ்விதம் கீழ் வராமல் சிறு நீர் வெளிவிட முடியாது. காற்று பறியும் போதும் மல வெளியேற்றத்தின் போதும் கூட இது ஏற்படுகிறது.

சிறுநீர்ப்பையின் பலவீனத்தினல் சிறுநீர் தாமதித்து வெளிப் படுகிறது அல்லது பலவந்தமாக முக்கும்போது மலப்பை வெளியே வருகிறது.

ஜனனேந்திரியங்களின் மேல் துணிபடுவது போன்ற சிறு ஸ்பரிசம் கூட சகிக்க முடியாமை (மூரெக்ஸ்).

## நைட்டிரிக் ஆஸிட்
## (Nitric Acid)

இதற்கும் பூந்தசை வாயில்களுக்கும் முக்கிய சம்பந்தம் இருக் கிறது: அதாவது தோலும் ஜவ்வுகளும் ஒன்று சேருமிடங்கள் வெடிப் புகள்; நீண்ட பிளவுகள். அப்பாகங்களில் சிறு குச்சிகள் இருப்பது போன்ற குத்தும் வலி.

சிறுநீர், குதிரையின் நீர்போன்று, உக்கிரமான நாற்றமடித்தல்.

சரீரத்தின் சகல துவாரங்களின் வழியாகவும் நல்ல சிகப்பு நிற முள்ள இரத்த ஒழுக்கு.

குத்து வலியுள்ள புண்கள்; கழலைக் கட்டிகள்; காய்ப்புக்கட்டிகள்; மேஹரோகக் கட்டிகள் (ஸைக்கோஸிஸ்).

தைரியமற்ற, முன்கோபமுள்ள கருமையான தோற்றம் கொண்ட வர்கள். தன்மைகள்: >வண்டியில் சவாரி செய்தல்.

* * *

ஸிபிலிஸ் வியாதிக்கு அல்லோபதியர்களால் கொடுக்கப்படும் மெர்குரியின் விளைவுகளுக்கு மிக நல்ல பலன் அளிக்கும் நமது மாற்று மருந்துகளில் நைட்ரிக் ஆஸிட் ஒன்று. மெர்குரியின் துர்வினி யோகத்தினல் ஏற்படும் கெடுதலான மற்ற விளைவுகளுக்கு வேறு மருந்துகள் மேலானவை; அதாவது குறிப்பாக ஹீபார் ஸல்பர், கல்கே, ஆகியவையாகும். தோலும் ஜவ்வுகளும் ஒன்று சேரும் இடமான வாய் (ஓரங்கள்), மூக்கு, அபானத்துவாரம் முதலிய பூந்தசை வாயில்களுடன் நைட்ரிக் ஆஸிட் விசேஷ இணக்கம் கொண்டுள்ளது. வாயின் ஓரங்களில் வெடிப்புகளை நாம் காண்கிறோம். அவை புண்ணுகவும் சொறிபிடித்தும் இருக்கும். இன்னும் வாயில் சிறிய வெள்ளைநிறப் புண்கள், மிகுந்த உமிழ் நீருடன் வாய்ச்சூடு, ஈறுகளில் வீக்கம், வாய் நாற்றம் முதலியனவும் இருக்கும்.

முதலில் மெர்கூரியஸ் உபயோகிக்கப்பட்டு பலன் ஏதும் காணுத நிலையில் நைட்ரிக் ஆஸிட் கொடுக்கப்பட்டால் அது மெர்கூரியஸை நல்ல முறையில் பின்பற்றி அனேகமாக சொஸ்தம் செய்கிறது.

ஈறுகளின் பஞ்சுபோன்ற புண்ணுன வீக்கத்துடன் கூடிய நிலைமை தொண்டைக்கும் பரவுகிறது. இது பழைய வைத்திய முறை



யின் மெர்குரி உபயோகமும் ஸிபிலிஸூம் ஒன்று சேர்ந்த விளைவாக இருக்குமானல், இதற்கு நைட்ரிக் ஆஸிட் முதல் மருந்து இதே போல் இம்மருந்தின் செய்கை அன்னக் குழாயின் மறு துவாரத்திலும் நிச்சயமான பலனைத் தருகிறது.

இதேபோல் அபானத்திலும் வெடிப்புகள் ஏற்பட்டு பிளவுகள் தோன்றுகின்றன. (ரட்டன்ஹியா) மூலங்கள் வெளித்தள்ளப்பட்டு, பிளவு உண்டாகி அதனின்றும் இரத்தம் வடிவதுடன் மிகுந்த வலியும் ஏற்படுகிறது. அபானத்தில் இம்மருந்துக்கு இருப்பது போன்ற மிக உறுதியான இயக்கம் வேறு எந்த மருந்துக்கும் கிடையாது. இதன் மிக விசேஷமான ஒரு குறி, "மலம் வெளியேற்றப்பட்ட பின், மிருது வான மலமாயிருந்தால்கூட, மிகுந்த வலி ஏற்படும்" என்பதாகும். ஒரு முறை மலம் கழிந்தபின் நோயாளி ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களுக்கு வலியினல் அவஸ்தைப்பட்டு நடந்துகொண்டே இருக்கிருன் (ரட்டன்ஹியா). சீதபேதியில் இக்குறி இம்மருந்தை நக்ஸ்வாமிகா, மெர்கூரியஸ் ஆகிய இரண்டு மருந்துகளினின்றும் வேருக அடையாளப் படுத்துகிறது நக்ஸ்வாமிகாவில் மலம் கழிந்த பின் வலிகுறைந்து விடுகிறது. மெர்கூரியஸூக்கு எல்லா சமயத் திலும் அல்லது மலங்கழிவதற்கு முன்னும், பின்னும், அச்சமயத்தும், பெருங்குடலின் அடிப்பாகத்தில் வலியுடன் கடுப்பும் இருக்கிறது.

இம்மருந்தின் எல்லா நோய்களிலும் மற்றுமொரு மிகத்திட்டமான விசேஷக்குறி "நோயினல் பாதிக்கப்பட்ட பாகத்தில் சிலாம்பு இருப்பதுபோன்ற குத்தும் வலி." நைட்ரிக் ஆஸிடுக்கு உடலின் எல்லா துவாரங்களின் வழியாகவும் பொதுவாக நல்ல சிகப்புநிற இரத்த ஒழுக்கு உண்டு. முக்கியமாக டைபாய்டு ஜூரத்திலும் மூல வியாதியிலும் அவ்விதம் இருக்கிறது. நாட்பட்ட வயிற்றுப்போக்கிற்கு நம்முடைய மிக நல்ல மருந்துகளில் நைட்ரிக் ஆஸிட் ஒன்று. அபானத் துவாரத்துக்கு அருகில் உண்டாகும் காய்ப்புக் கட்டிகளுக்குக் கொடுக்கப்படும் கீர்த்தி வாய்ந்த திரவம் என்று சொல்லப்படும் தூஜா, ஸ்டாபிஸா கிரியா, நைட்ரிக் ஆஸிட் ஆகிய மூன்றில், இது ஒன்ருகும். சிறு நீருக்கு மிக அருவருக்கத்தக்க துர்நாற்றம் கொண்டுள்ள பென்ஸோயிக் ஆஸிட், நைட்ரிக் ஆஸிட், ஸெபியா, ஆகிய மூன்று மருந்துகளில் இது ஒன்று.

பென்ஸோயிக் ஆஸிட் சிறுநீருக்கு மிகக் கருமையான நிறத் துடன் மிகக் கடுமையான நாற்றம் உண்டு.

நைட்ரிக் ஆஸிட் சிறுநீர் கருமையாகவும் குதிரையின் சிறுநீர் போன்ற நாற்றத்துடனும் இருக்கும்.

ஸெபியாவின் சிறுநீர் அருவருப்பான நாற்றமும் புளிப்பும், கொண்டது.

## ஸல்ப்யூரிக் ஆஸிட்
## (Sulphuric Acid)

மிகுந்த பலவீனம், அத்துடன் பிறருக்குத் தென்படாத சரீரத்தின் உள்ளுக்குள்ளே நடுக்க உணர்ச்சி.

சரீரத்தின் எல்லாத் துவாரங்களிலிருந்தும் ரத்த ஒழுக்குகள்; அத்துடன் சருமத்தின் கீழே இரத்தத் தேக்கப் புள்ளிகள்.

உண்மையில் சுத்தமாக இருந்தாலும், குழந்தைகளுக்கு உடல் முழுவதும் புளிப்பு வாடையும் புளித்த ஆஸிட் வாந்தியெடுப்பும் ஏற்படும்.

கேசங்கள் செம்பட்டையாயுள்ள வயதான மனிதர்களுக்கு, முக்கியமாக ஸ்திரீகளுக்குப் பொருந்தும்; மாதவிடாய் நிற்குங் காலங்களில் ஏற்படும் சரீரச் சூடும் எரிச்சலும்.

வாய், ஈறுகள் அல்லது வாய் முழுவதும் ஏற்படும் சிறு வெள்ளை நிறப் புண்கள்; ஈறுகளிலிருந்து இலகுவாக இரத்தம் வடிதல்; வலியுள்ள புண்கள்; நாற்றமுள்ள சுவாசம், நசுக்கல்களினால், சூடான கன்றிப்போன சருமம் கொண்ட, புண்களின் கெடுதலான விளைவுகள்; சக்தி குறைவு.

தலையின் முன்பக்கத்தில் மூளை தளர்ந்தும், ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் அது விழுவது போன்றும் உணர்ச்சி (பெல்., பிரை., ரஸ்., ஸ்பை.) வயதான சாராய வெறியர்களின் வயிற்றுக் கோளாறுகளுக்கு அடிக்கடி இம்மருந்து மிகப் பிரயோஜனப் படுகிறது.

* * *

வாயில் ஏற்படும் சிறு வெள்ளை நிறப் புண்களின் தாக்குதல்களுக்கு ஸல்ப்யூரிக் ஆஸிட் மற்றுமொரு விசேஷ மருந்து. இம்மாதிரி வாயுடன் சரீரம் தளர்ச்சியுற்றிருக்கும் குழந்தைகளுக்கும், மிகப் பலவீனமடைந்துள்ளவர்களுக்கும் இம்மருந்து விசேஷ பலன் அளிக்கிறது புளித்த வாந்தியுடன் அடிக்கடி வயிற்றில் புளிப்பு ஏற்படுகிறது. (ஐரிஸ் வெர்ஸிகொலும், ரொபினுவும் புளித்த ஏப்பமும் வாந்தியும்) குழந்தையைப் பரிசுத்தமாக வைத்திருப்பதில் மிகக் கவனம் செலுத்தின போதும்கூட அதன் உடல் முழுவதும் புளிப்புவாடை, (ரியூம், ஹிபார், மெக்னீஷியா). பலவீனப்பட்டவர்களுக்கு இது சரியான ஏற்ற மருந்தாக அமைகையில் அவர்களிடம் தோன்றும் மிகத்திடமான விசேஷக் குறிகளில் ஒன்று, அதாவது நிச்சயமான மிக வலிமையுள்ள குறி, சரீரத்தின் உள்ளுக்குள் ஏற்படும் நடுக்க உணர்ச்சி. இது, தான் அறியும் ஒரு குறி. ஏன் என்றால், இந்தத் தீர்மானமான உணர்ச்சி அதிகத் துன்பப்படுத்தினாலும் கூட, நடுக்கம் வெளித் தோன்றுவதில்லை. இக்குறி, உக்கிரமான குடியினால் சரீரம் கட்டுக்குலைந்த அல்லது சரீர ஆரோக்கியம் முழுவதும் அழிந்த வயதான மது வெறியர்களிடம் அடிக்கடி தென்படுகின்றது. (ரனன்குலஸ் பல்ப் பார்க்கவும்.) எப்படியும் இக்குறி இப்படிப்பட்ட மனிதர்களிடம் மட்டும்தான் தென்படுகிறது என்று எல்லைப் படுத்தப்படவில்லை. மற்ற காரணங்களினால் பலவீனம் ஏற்படும்போது மற்ற நோயாளிகளிடத்திலும் அடிக்கடி இக்குறி தென்படுகிறது. காரணம் எதுவாயினும் இக்குறி அடையாளமாகத் தென்படும்போது, ஸல்ப் யூரிக் ஆஸிட் ஒரு போதும் மறக்கப்படுதல் கூடாது. சருமத்தின் அடியில் ஏற்படும் (Purpura Haemorrhagica) என்னும் இரத்தத் தேக்கப் புள்ளிகளில் இம்மருந்தின் உபயோகம் பற்றி நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். க்ரோ டாலஸுக்கு உள்ளதுபோல் இதற்கும் சரீரத்தின் எல்லா துவாரங்களிலிருந்தும் இரத்த ஒழுக்குகள் உண்டு. (அஸெட்டிக் ஆஸிட், த்லாஸ்பி) அத்துடன் சருமத்தின் கீழே ஏற்படும் இரத்தத் தேக்கப்புள்ளிகளிலும் இரத்தம் நிலையாகத் தங்கிவிடுகிறது. இக்கடைசிக் குறி, சருமத்தில் நசுக்கப்படுவதன் விளைவாக ஏற்படும் கறுப்பும் நீலமும் கலந்த பொட்டுகளுக்கு ஸல்ப்யூரிக் ஆஸிட் உபயோகப்படலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. அனுபவம் அதனை உறுதிப் படுத்துகிறது. இது ஆர்னிகாவை நல்ல முறையில் பின்பற்றுகின்றது. நசுக்குப் படுவதால் உண்டாகும் ரத்தத் தேக்கத்திற்கு உதாரணமாக "கறுப்புக் கண்" போன்றவைகளுக்கு நம்முடைய மிக நல்ல மருந்துகளில் லேடம் பாலஸ்திரியும் ஒன்று. இது நிச்சயமாக சருமத்தின் கீழ் ஏற்படும் நசுக்கல்களுக்குத்தான். எலும்புகளைச் சுற்றி இருக்கும் நார் போன்ற தோலில் ஏற்படும் நசுக்கல்களுக்கு ரூட்டா இதேபோன்ற பலன் அளிக்கிறது. ஸல்ப்யூரிக் ஆஸிடில் தேவையான ஸல்பர் இருப்பதால், மாதவிடாய் நிற்குங் காலத்தில் ஸல்பர் பிரயோஜனம் தராதபோது திடீர் திடீர் என்று ஏற்படும் சூட்டு உணர்ச்சிக்கு இது வெற்றியடையலாம்.



## பிக்ரிக் ஆஸிட்
## (Picric Acid)

ஒப்பிட்டுப் பார்க்கில் இது ஒரு புதிய மருந்துதான். ஆனாலும், சில சிரேஷ்டமான நோய்தீர்க்கும் சக்திகளை இதற்குள்ளேயே இது வெளிப்படுத்தியுள்ளது. முதலாவதாக இது சரீர சக்தியைத் தாக்குகிறது என்பதை, மிகுந்த சோர்வு அல்லது சரீரம் முழுவதும் ஏற்படும் ஸ்திரமான அலுப்புற்ற உணர்ச்சி, விளக்கிக் காட்டுகிறது. இத்துடன் தொடர்ந்து பொதுவாக இதற்கேற்ற மன பலவீனம் அலக்ஷியத்தன்மை, இச்சாசக்தி குறைவு, படுத்துக்கொண்டே

148857



இருக்க விருப்பம் முதலியவைகளும் தோன்றுகின்றன. கால்களில் மிகுந்த கனமும், [illegible] தரையினின்றும் எழுப்ப முடியாமை, முதுகில் [illegible] கூடிய, களைப்படையச் செய்யும் வலி யுணர்ச்சி (பாஸ்பரஸ், ஸிங்க். மெட்.) சில சமயங்களில் தாழ்ந்த இடங் களிலும் கூட. சோர்வுற்று மிகச் சிறிய உழைப்பு அல்லது மன வேலை தலைவலியை ஏற்படுத்துகிறது. இத்தலைவலி, கல்வி பயிலும் மாணவர்கள், அதிக உழைப்புள்ள வியாபாரிகள், துக்கம் அல்லது மற்ற மன எழுச்சிகளினால் சோர்வுற்ற மனிதர்கள் ஆகியவர்களிடம் அடிக்கடி தென்படுகிறது.

இத்தலைவலி பல சமயங்களில் பிடரியும் கழுத்தும் சேருமிடத்தில் நிலைத்து நிற்கிறது, (நேட்ரம் மூர்., ஸிலீஸியா)< முக்கியமாக மன உழைப்பினால். சுருக்கமாக, இம்மருந்து நரம்புத் தளர்ச்சியின் பரி பூரணமான தோற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. தன் சித்த சக்தியை இழந்து விட்டதுபோன்ற நிலையில் உள்ள ஒரு வயதான மனிதனுக்கு இம்மருந்து மிகப் பிரயோசனப் பட்டதை நான் பார்த்தேன். அம்மனிதன் என்னிடம் வருவதற்கு கிட்டத்தட்ட ஒரு வருஷம் முன்பு வரையில் திடமாக இருந்திருக்கிறான். அவன், பிடரியில் கனம், பேசுவதற்கும் யோசனை செய்வதற்கும் புத்தியை உபயோகிக்க முடியாமை, பொதுவான சோர்வுடன் "சக்தி ஒடுங்கிய" உணர்ச்சி முதலியன இருப்பதாகக் குறைபட்டுக் கொண்டான். மூளை மிருதுப்பட்டு விட்டதாக நான் பயந்தேன். ஆனாலும் பிக்ரிக் ஆஸிட் ஆறுவது வீரியம் அவனுக்குக் கொடுத்தேன். அது அவனைத் தவறாமல் விரைவில் குணப்படுத்தியது. ஜனன உறுப்பு களில், முக்கியமாக ஆண்களுக்கு, இம்மருந்து ஏற்படுத்தும் விளைவு களில், பாஸ்பாரிக் ஆஸிட், பாஸ்பரஸ் ஆகிய மருந்துகளுடன், இதற்கு திடமான ஒற்றுமைக் குணங்கள் உள்ளன. புணர்ச்சியில் அதிக விருப்பத்துடன் பயங்கர நிமிர்ச்சியும், அதையடுத்து பலவீனம் அல்லது முழு சக்தியின்மையையும் ஏற்படுகிறது. மூளை, முள்ளந் தண்டு, பொதுவான நரம்புத் தளர்ச்சி முதலியன, பிரதானமாக மிதமிஞ்சிய புணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டிருந்தால், அதற்கு நம் முடைய மிகச் சிரேஷ்டமான மருந்துகளில் ஒன்றாக இது இருந்தே தீரும் என்பதில் சந்தேகமே கிடையாது. ஜெல்ஸிமியம், பாஸ்பாரிக் ஆஸிட், பாஸ்பரஸ், அர்ஜண்டம் நைட்ரிகம், ஸல்பர், அலூமினா, ஸிலீஸியா முதலியவைகளுடன் இதனையும் சேர்த்துப் படிக்கலாம். இவைகள் யாவும் மூளை, முள்ளந்தண்டு, பொதுவாக நரம்பு மண்டலம், முதலியவைகளை இயக்குகின்றன.

Edited, printed & published by Dr V. R. Murty, at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam

டாக்டர் மூர்த்தியின்

# கோல்டி

என்ற காச நிவாரணி
(ஹோமியோபதி மருந்து)

"கோல்டிராப்ஸ்" மருந்து ஆஸ்துமா என்ற காச நோயின் பல்வேறு நிலைகளிலும் திறம்பட இயங்கிக் குறித்த பலனைக் கொடுக்கின்றது. காசம், நரம்பு சம்பந்தப்பட்டதாயினும், சுவாசக்குழல் சம்பந்தப்பட்டதாயினும் அல்லது வேறு எவ் வகை இருமல் நோயாய் இருப்பினும் அதை நிச்சயமாக நிவர்த் திக்கும் கைகண்ட மருந்தாக இது இருக்கின்றது. இதை உட் கொண்டவுடன் இறுகிய கோழை இளக்கமுற்று வெளியில் கொண்டுவரப்படுகின்றது; மூச்சுத் திணறல் நின்று நோயாளி நிம்மதி பெற முடிகிறது. இந்த ஔஷதம் சுவாச உறுப்புகளைச் சீர்படுத்தி நோயற்ற சாதாரண ஒழுங்கு நிலையை உருவாக்கு கின்றது.

"கோல்டிராப்ஸ்" மருந்தில் போதைப் பொருள்கள் சிறிதும் இல்லை. பிற மருந்துகளைப் போல இது நோய்க் குறிகளை சமனம் செய்யக்கூடியதும் அல்ல. பிளாட்டா ஓரி, செனிகா, ஆண்டிம் டார்ட். இபிகாக், நேட்ரம் ஸல்ப், பெர்ரம் பாஸ், முதலிய மருந்துகளின் மூல சக்திகள் யாவும் ஒன்று திரட்டப்பெற்று உட்பொதிந்த நிலையில், முற்றிலும் ஒரு ஹோமியோபதி ஔஷதமாக 'கோல்டிராப்ஸ்' தயாரிக்கப்பட் டுள்ளது.

ஒரு அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 3—75

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்
கும்பகோணம் (தென் இந்தியா)

Regd. No. 5070

# ஜெர்மனி Dr. மடாஸ் & கம்பெனியாரின்
# பயோகெமிக் கூட்டு ஔஷதங்கள்

நமது சரீரம் சரிவர வேலை செய்ய 12 தாது உப்புக்களும் மிக்க அவசியம். இவைகளில் ஏதாவது குறைவுபடுமாயின் நாம் குறிப்பிட்ட உபாதைகளினால் அவதியுறுகிறோம். இந்த அடிப்படையில் சில பயோகெமிக் ஔஷதங்களைக் கூட்டாக சேர்த்து ஜெர்மனி Dr. மடாஸ் & கம்பெனியார் சில உபாதைகளுக்கு விசேஷ தயாரிப்புக்கள் தயாரித்திருக்கின்றனர். அவைகளின் விபரம்:

நெ. 1 இரத்தக்குறைவு
நெ. 2 ஆஸ்துமா
நெ. 3 வயிற்று வலி
நெ. 4 மலச்சிக்கல்
நெ. 5 ஜலதோஷம்
நெ. 6 இருமல்
நெ. 7 நீரழிவு
நெ. 8 வயிற்றுப் போக்கு
நெ. 9 சீதபேதி
நெ. 10 டான்ஸில்
நெ. 11 சாதாரண சுரம்
நெ. 12 தலைவலி
நெ. 13 வெள்ளைப்பாடு
நெ. 14 நீர்க் குளுவான்
நெ 15 மாதவிடாய்க் கோளாறு
நெ. 16 நரம்புத் தளர்ச்சி
நெ. 17 மூல உபாதை
நெ. 18 பயோரியா
நெ. 19 கீல் வாதம்
நெ. 20 தோல் வியாதிகள்
நெ. 21 பல்முளைக்கும் போது ஏற்படும் உபாதை
நெ 22 பலக் குறைவு
நெ. 23 பல்வலி
நெ. 24 டானிக்
நெ. 25 அஜீரணம்
நெ. 26 சுகப்பிரசவம்
நெ. 27 வீர்ய விருத்தி
நெ. 28 விசேஷ டானிக்

ஒவ்வொரு நம்பரும் 300 மாத்திரைகள் கொண்ட அழகான பிளாஸ்டிக் பெட்டியில் உள்ளன. ஒரு பெட்டி விலை ரூ. 1-62. 28 பெட்டிகளும் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூ. 43-00
(அனுப்பும் செலவு தனி)

கிடைக்குமிடம்:

**இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,**
நெ. 6, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை — 1

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |